மின்னிதழ்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

2024 ஜனவரி 6 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 06 | Saturday 06, January, 2024 | 10 பக்கங்கள் | 50/-


## நாடு முழுவதும்

# நாளை முதல் 13 வரை டெங்கு ஒழிப்பு வாரம்



நாட்டில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் நாளை (07) முதல் 13ஆம் திகதிவரையான ஒரு வார காலத்தை விசேட டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு 06







யாழ். மாவட்ட தொழில் வல்லுநர்களுடான சந்திப்புக்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை யாழ். மாவட்ட விவாக பிறப்பு இறப்பு பதிவாளர் சங்கத் தலைவியும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான சோமசூரியசிங்கம் வரதலக்ஷ்மி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அருகில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் காணப்படுகிறார்.

# 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தாரளமாக போதுமானது

## அதில் மத்திய அரசாங்கம் ஒருபோதும் தலையிடாது; யாழில் ஜனாதிபதி ரணில்

மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது. எனவே, அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் அதிகாரப்பகிர்வு என்பது ஓர் அரசியல் எண்ணக்கருவாக மாத்திரம் அன்றி, பொருளாதார அடிப்படையிலும் யதார்த்தமாக அமைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மாகாண மட்டத்தில் சுயாதீன பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பிலான தெரிவை ஜப்பான், கொரியா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும், 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தங்களது மாகாணத்தின் அபிவிருத்திக்காக தொடர்ச்சியாக பயன்படுத்த வேண்டுமென அனைத்து மாகாணங்களினதும் மக்கள் பிரதிநிதிகளிடத்தில் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட தொழில் வல்லுநர்களுடன் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில் வல்லுநர்கள் இதில் கலந்துகொண்டிருந்ததோடு, நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்கள் வழங்கிய யோசனைகள் மற்றும் அவர்களின் கேள்விகளுக்கும் ஜனாதிபதி சாதகமான பதில்களை வழங்கியதுடன், அவர்களுடன் 06

# வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் 6,371 ஏக்கர் காணி

## வர்த்தமானி அறிவித்தலை நீக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் சீ.வி.கே. கோரிக்கை



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் 6,371 ஏக்கர் காணியை உயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளமையை நீக்குமாறு ஜனாதிபதியிடம் வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழு 06

# IMF பிரதிநிதிகள் குழு வியாழனன்று வருகை




சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் எதிர்வரும் வியாழக்கிழமை (11) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்களது விஜயத்தை நிதி அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தமது இலங்கைக்கான விஜயத்தின் போது, நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஆராயவுள்ளனர். இலங்கையினுடைய பொருளாதார நிலைமையில் அண்மைக்காலப் போக்குகள், 06

## 'Zee Tamil' சரிகமபா போட்டியில் வெற்றி பெற்ற

# கில்மிஷாவுக்கு ஜனாதிபதி வாழ்த்து

## குடும்பத்தாருடன் ஷெல்பியும் எடுத்த கில்மிஷா



இந்தியாவில் நடைபெற்ற 'Zee Tamil' சரி கம பா 'Little Champs 2023' போட்டியில் மகுடம் சூடிய சிறுமி கில்மிஷா உதயசீலன் தனது குடும்பத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். 14 வயதான சிறுமி கில்மிஷா உதயசீலன் 06

# பெப்ரவரி முதல் வாரத்தில் மின் கட்டணம் குறையும்

## உரிய தரவுகள் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பு



மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான உரிய தரவுகள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் 06

## 06 முதல் 09 வயது குழந்தைகளுக்கு

# சின்னம்மை நோய்க்கான தடுப்பூசி வழங்கும் திட்டம் இன்று ஆரம்பம்

## WHO, UNICEF சுகாதார அமைச்சுக்கு ஒத்துழைப்பு



ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) இலங்கையில் சின்னம்மை நோய்க்கான மேலதிக தடுப்பூசிகளை வழங்கும் செயற்பாட்டை துரிதப்படுத்த சுகாதார அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. 06



03 — 1000 CC கொள்ளளவு கொண்ட சிறிய ரக கார் இறக்குமதிக்கு அனுமதி வழங்க தீர்மானம்



03 — அனைத்து விபரங்களும் www.health.gov.lk இல் — தாதியர் பயிற்சிக்கு மாணவர் தேர்வு நேர்முகப் பரீட்சை 13 முதல் 18 வரை

## கடல் வழியாக இந்தியாவுக்கு கடத்திய

# 17 கோடி ரூபா பெறுமதியான தங்க கட்டிகள் திருச்சியில் மடக்கிப்பிடிப்பு

## இந்திய மத்திய சுங்கத்துறை அதிரடி

**மன்னார் குறூப் நிருபர்**



தலைமன்னாரிலிருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக படகில் தனுஷ்கோடிக்கு கொண்டுசெல்லப்பட்ட (இந்திய மதிப்பு 4.50 கோடி) 17 கோடியே 45 இலட்சத்து 35,000 ரூபா மதிப்பிலான 7.70 கிலோ தங்கக்கட்டிகள் திருச்சியில் 06

# 2023 ஆம் ஆண்டிலேயே அதிக போதைப்பொருள் கைப்பற்றல்

## 81 சந்தேக நபர்களும் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கடந்த வருடத்தில் சுமார் இரண்டரை பில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருளை கைப்பற்றியதுடன், 81 சந்தேக நபர்களை கைது செய்ததாக, சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில வருடங்களில் சுங்கத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் போதைப்பொருள் கைப்பற்றியமையை நோக்கும் போது, கடந்த வருடத்திலேயே அதிக தொகை கொண்ட போதைப்பொருளை கைப்பற்றியதாகவும், அத்திணைக்களத்தினர் தெரிவித்தனர். 06

## தென்பகுதி கடலில் கடற்படை, பொலிஸ் அதிரடி

# 245Kg ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் ஆழ்கடலில் 06 சந்தேக நபர்கள் கைது

## ஆழ்கடல் மீன்பிடிப்படகுடன் மடக்கிப் பிடிப்பு



சுமார் 245 கிலோகிராம் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் 06 பேரை ஹிக்கடுவைக்கு மேற்கே ஆழ்கடலில் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கவிந்து 01 என்ற ஆழ்கடல் படகிலேயே இந்த போதைப்பொருட்கள் கடத்திக் கொண்டு வரப்பட்டதாகவும் கடற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஆழ்கடலில் இந்தப் படகை கடற்படையினர் கைப்பற்றி, நேற்று காலி கடற்படை முகாமுக்கு கொண்டு வந்தனர்.

கைப்பற்றப்பட்ட ஆழ்கடல் படகில் 150 ஐஸ் போதைப்பொருள் பொதிகளும், 28 ஹெரோயின் போதைப்பொருள் பொதிகளும் இருந்தன. இவற்றின் பெறுமதி 3,190 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதெனவும் கடற்படையினர் தெரிவித்தனர். 06

## யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி









## யாழ். மாவட்ட தொழில் வல்லுனர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி




## 'சரிகமப' வெற்றியாளர் கில்மிஷாவின் குடும்பத்தினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு





தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜனவரி 6 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
சுபஹ் - 05.02
லுஹர் - 12.17
அஸர் - 03.38
மஃரிப் - 06.08
இஷா - 07.23

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் மார்கழி 22
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

ஆயுர்வேத உற்பத்தி தொழில்துறைக்கு

# வற் வரியிலிருந்து விலக்களிப்பு வழங்க அரசாங்கம் தீர்மானம்

## சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி



சுகாதார செலவைக் குறைக்கும் வகையில் ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

பாரம்பரிய வைத்தியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சுதேச வைத்திய முறையைப் பாதுகாப்பதற்கும் விசேட அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி இவ்வாறு தெரிவித்தார்.

சுதேச மருத்துவத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தலைமைத்துவத்துடன் "பொடி மன்த்ர" உடல் மந்திரங்கள் என்ற பெயரில் ஆயுர்வேத ஆரோக்கிய மையங்களை சுதேச வைத்தியத்துறைக்கு அறிமுகம் செய்யவுள்ளதாகவும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மேலும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி,

"இதுவரை நாம் சுதேச மருத்துவத் துறையில் பல சிறந்த சாதனைகளைப் படைத்துள்ளோம். ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் சுகாதாரச் செலவுகளைக் குறைக்க முடிந்தது.

பாரம்பரிய மருத்துவத்தை பாதுகாக்க விஷேட பிரிவொன்றை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. பாரம்பரிய மருத்துவ முறைக்கு ஒரு முறையான நிறுவனம் ஸ்தாபிக்கப்படும் வரை பாரம்பரிய மருத்துவத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இந்த விஷேட பிரிவு நிறுவப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சுதேச மருத்துவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கி, அந்த மருத்துவ முறை குறித்து ஆய்வுகள் நடத்தி, முறையான கட்டமைப்பைத் தயாரிப்பதுடன், அந்தத் தொழில்துறை தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் இதன் கீழ் இடம்பெறும்.

அது குறித்து கலந்துரையாடிய பின்னர், திறைசேரிக்கு சுமை ஏற்படாத வகையில் பாரம்பரிய மருத்துவத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு பிரிவை நிறுவுவதற்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவைக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

06

## நியூசிலாந்து உயர்ஸ்தானிகருடன் கல்வி இராஜாங்க அமைச்சர் சந்திப்பு



நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் Michael Edward Appleton, கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரை கல்வி அமைச்சில் சந்தித்தார். இச்சந்திப்பின் போது நாட்டின் தற்போதைய சூழ்நிலை, மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன. இதன்போது பாடசாலைகள், கல்வி அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பான கோரிக்கை ஒன்றையும் கல்வி இராஜாங்க அமைச்சர் கையளித்தார். இச்சந்திப்பில் நியூசிலாந்து பிரதி உயர்ஸ்தானிகர் என்றுட்ரவலர் கலந்து கொண்டார்.




தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர், பேராசிரியர் கே.எம். காதர் மொஹைதீன் நேற்று (05) சந்தித்ததுடன், மிக்ஜாம் புயல் பேரிடலர் நிவாரணப் பணிக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபா காசோலையை அவர் வழங்கினார். இதன்போது யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வி.அப்துல் வஹாப், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, மாநில பொதுச் செயலாளர் கே.ஏ. எம்.முகமது அபுபகர், தமிழ்நாட்டு வக்ப் போர்டு தலைவர் எம்.அப்துல் ரகுமான், இளைஞர் அணி தலைவர் முனாவர் அலி, மாணவர் அணி தேசிய தலைவர் முகமது அர்சத் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

## தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்

இலங்கை தமிழரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு ஏற்கனவே திட்டமிட்ட நாட்களில் நடைபெறுமென அக்கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


"இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி நடைபெற்றதுடன், இதன்போது எடுக்கப்பட்டதீர்மானத்துக்கமைய தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் என்.சி. வீதி உப்புவெளி, திருகோணமலையில் ஜேக்கப் வீச் றிசோட் மண்டபத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இம்மாநாடு ஆரம்பமாகி நடைபெறும்" என்றார்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறுமென்பதுடன், இதுவரை அதில் எந்த மாற்றமும் இல்லையென, இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

## தமிழ் எழுத்துருவாக்கத்திலான 25 அடி திருவள்ளுவர் சிலை

### தமிழகம் கோவையில் திறப்பு



தமிழகத்தில் தமிழ் எழுத்துகளால் உருவாக்கப்பட்ட 25 அடி உயரமான திருவள்ளுவர் சிலை நேற்று (05) திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தமிழகத்தினுடைய கோவை மாவட்டத்தின் பொள்ளாச்சி வீதியில், குறிச்சிக்குளம் எனும் இடத்தில் இந்த திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இந்த திருவள்ளுவர் சிலை 03 தொன் எடையில் உருக்கு இரும்பினால் அமைக்கப்பட்டுள்ளதுடன், விசேடமாக இந்த சிலை முழுவதும் தமிழ் எழுத்துகளால் அமைக்கப்பட்டு நெற்றியில் அறம் என்ற சொல் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாலை வேளைகளில் மின் விளக்குகளால் ஒளிரும் வகையில் இந்த சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

52 கோடி இந்திய ரூபா செலவில் உருவாக்கப்படும் 'Smart City' திட்டத்தின் கீழ் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோவிட் 19 தடுப்பூசியின் பின் நோய்கள் ஏற்படுவதாக கூறுவதில் உண்மையில்லை

கோவிட் 19 தடுப்பூசி பெற்றுக் கொண்ட சிறிது காலத்தின் பின்னர் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக சமூகத்தில் அதிகம் பேசப்படுவதாகவும் ஆயினும், இதில் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தக்கூடிய உண்மை இல்லையென, விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்தார்.

இதேவேளை, தட்டம்மை தடுப்பூசி போடும் தகுதி இல்லாத 9 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்நோய் பரவுகின்றமை அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தட்டம்மை நோயாளர்களில் 33 சதவீதமானவர்கள், மூட நம்பிக்கைகள் காரணமாக தட்டம்மை தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களென, தொற்றுநோய் வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்தார்.




உகண்டா தலைநகர் கம்பாலாவில் நடைபெற்று வரும் பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்களுக்கும் பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமை தாங்குவோருக்குமான மாநாட்டில் (CSPOC) கலந்துகொள்ளும் இலங்கை தூதுக்குழுவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

## 2024 வாகனப் பதிவின்போது வரிக் கோவை இலக்கம் சமர்ப்பிப்பது கட்டாயம்

### பெப்ரவரி மாதம் முதல் அமுல்




வாகனப் பதிவு தொடர்பாக விசேட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்த மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நிஷாந்த அனுருத்த வீரசிங்க, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் அனைத்து வாகனப் பதிவுகளும் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

அத்துடன், வாகனப் பரிமாற்றத்துக்கும் வரி அடையாள இலக்கம் கட்டாயமெனவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவித்த போது,

"வரி அடையாள இலக்கம் இந்த வருடத்தின் பெப்ரவரி மாதம் முதல் கட்டாயமாக்கப்படுவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய, அனைத்து வாகனப் பதிவு மற்றும் வாகனப் பரிமாற்றத்துக்கும் வரி அடையாள இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கத்தை பெற்றுக்கொண்டே மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தை நாட வேண்டும். இல்லையெனில், வாகனப் பதிவு மற்றும் வாகனப் பரிமாற்றத்துக்கான சேவைகள் வழங்கப்பட மாட்டாது" எனத் தெரிவித்தார்.

### அனைத்து விபரங்களும் www.health.gov.lk இல்

## தாதியர் பயிற்சிக்கு மாணவர் தேர்வு நேர்முகப் பரீட்சை 13 முதல் 18 வரை



தாதியர் பயிற்சிக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கான முதற்கட்ட தகுதி தேர்வு நேர்முகப் பரீட்சை தொடர்பான அனைத்து விவரங்களும் இப்போது சுகாதார அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் (https://www.health.gov.lk/) வெளியிடப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் இணையதளத்தை பார்த்து, நேர்முகப் பரீட்சையின் திகதி, இடம் மற்றும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அறிவித்துள்ளது. 2019/2020 க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களில் சித்தியடைந்த 4,000க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து மாணவர் தாதியர் பயிற்சியை தெரிவு செய்வதற்காக இம்மாதம் 13ஆம் திகதி முதல் பெப்ரவரி 18ஆம் திகதிவரை ஆரம்பநிலை தகுதி தேர்வு நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

## வற் வரி உயர்வு காரணமாக சீமெந்து விலை அதிகரிப்பு

வற் வரி அதிகரிப்பு காரணமாக சீமெந்து பைக்கொன்றின் விலை 150 ரூபாவிலிருந்து 350 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக, சீமெந்து உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

இந்த விலை அதிகரிப்பின் மூலம் சில சீமெந்து நிறுவனங்களில் 50 கிலோகிராம் நிறையுடைய சீமெந்து பைக்கொன்றின் விலை 2,300 ரூபாவாகவும், மேலும் சில நிறுவனங்களில் சீமெந்து பைக்கொன்றின் விலை 2,450 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

வற் வரி அதிகரிப்புக்கு முன்னர் சில நிறுவனங்களில் சீமெந்து பைக்கொன்றின் விலை 1,980 ரூபாவாகவும், சில நிறுவனங்களில் சீமெந்து பைக்கொன்றின் விலை 2,300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன.

1000 CC கொள்ளளவு கொண்ட

## சிறிய ரக கார் இறக்குமதிக்கு அனுமதி வழங்க தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதற்காக மீண்டும் கார்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக, வாகனங்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

நாட்டில் நிலவிய கொரோனா பரவல் சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடியை அடுத்து, நாட்டுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. ஆயினும், மீண்டும் வாகன இறக்குமதியை மேற்கொள்வதற்கு தயாராகி வருவதாகவும், அச்சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஒருமாத காலத்துக்குள் அதற்கான நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியுமெனத் தெரிவித்த அவர், முதற்கட்டமாக 1000 CC க்கு குறைந்த எஞ்சின் கொள்ளளவு வகை வாகனங்களை மட்டுமே இறக்குமதி செய்வது தமது சங்கத்தின் எதிர்பார்ப்பெனவும், அவர் தெரிவித்தார்.

இவ்வாறான கார்களை இறக்குமதி செய்வதன் மூலம் வெளிநாட்டு கையிருப்பை ஸ்திரமான நிலையில் வைத்துக்கொள்ள முடியுமென்பதுடன், வருமான வரியை அதிகரிப்பதும் இதன் ஒரு நோக்கமெனவும், அவர் தெரிவித்தார்.

ஒரு மாத காலத்துக்குள் இதற்கான நடவடிக்கைகளை நிறைவு செய்து விரைவில் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 22ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 22

## குறள் தரும் சிந்தனை



உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்

பணயம் வைத்து இடைவிடாமல் சூதாடுவதை ஒருவன் பழக்கமாகவே கொள்வானேயானால் அவன் செல்வமும் அந்தச் செல்வத்தை ஈட்டும் வழிமுறையும் அவனைவிட்டு நீங்கிவிடும்.

# மீண்டும் அச்சுறுத்தும் கொரோனா தொற்று!

கொவிட் தொற்றில் இருந்து உலகம் மீண்டெழுந்து விட்டது என்றுதான் உலக மக்கள் அனைவரும் நிம்மதி கொண்டிருந்தனர். கொவிட் தொற்று உலகை விட்டு முற்றாக நீங்கி விட்டதென்றும், எதிர்காலத்தில் அதுபற்றிய அச்சமே தேவையில்லையென்றும்தான் மக்கள் எண்ணியிருந்தனர்.

ஆனால் உண்மை அதுவல்ல... கொவிட் தொற்று உலகை விட்டு நீங்கியிருந்த வேளையில், அந்த வைரஸின் திரிபுகள் உலகை அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. கொரோனா வைரஸின் புதிய திரிபொன்று உலகை தற்போது அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. எமது அயல்நாடான இந்தியாவில் அதன் தாக்கங்கள் சற்று அதிகமாகவே உள்ளன. இந்தியாவில் கேரள மாநிலத்தில் அந்த வைரஸ் வேகமாகப் பரவியுள்ளதுடன், ஓரிருவர் அதற்குப் பலியாகியும் உள்ளனர்.

ஜே.என்.1 என்ற அந்த கொரோனா திரிபு வைரஸ் தமிழ்நாட்டிலும் பலருக்குப் பரவியுள்ளது. அந்த பிறழ்வு வைரஸ் இலங்கையில் பரவியுள்ளதாக இதுவரை உத்தியோகபூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் இலங்கையில் அந்த வைரஸ் இதுவரை பரவியுள்ளதா அல்லது இல்லையா என்பதை உறுதிபடக் கூற முடியாமலுள்ளது.

வைரஸ் நுண்கிருமிகளின் இயல்பு இவ்வாறானதுதான். அக்கிருமிகள் திரிபடைந்து கொண்டேயிருக்கும் இயல்பைக் கொண்டுள்ளன. அதிலும், கொரோனா வகை வைரஸ்கள் விரைவில் திரிபடைந்து செல்லும் இயல்பைக் கொண்டுள்ளன. உலகில் கொரோனா தொற்று தோற்றம் பெற்றதில் இருந்து இதுவரை ஏராளமான திரிபுகள் உருவாகியுள்ளன. ஆனாலும் முதன் முதலில் தோற்றம் பெற்ற கொரோனா வைரஸ் ஏற்படுத்திய உயிரிழப்புகளை அதன் பின்னர் உருவாகிய பிறழ்வு வைரஸ்கள் ஏற்படுத்தவில்லை.

அவ்வாறே தற்போது உலகை மீண்டும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற ஜே.என்.1 பிறழ்வு வைரஸும் பாரியளவிலான உயிரிழப்புகளை இன்னும் ஏற்படுத்தவில்லை. இந்தியாவில் ஓரிரு உயிரிழப்புகளே இதுவரை சம்பவித்துள்ளன. இந்த வைரஸ் தொற்று விரைவாகப் பரவினாலும் கூட, முன்னரைப் போன்று உயிரிழப்புகள் அதிகளவில் சம்பவிக்காதென்பதே மருத்துவ நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது.

ஆனாலும் இந்த விடயத்தில் மக்கள் அலட்சியமாக இருந்து விட முடியாது. மீண்டுமொரு பெருந்தொற்றையும் அதன் பாதிப்புகளையும் தாங்கிக் கொள்ளக் கூடிய வல்லமை எமது நாட்டு மக்களுக்கு மாத்திரமன்றி, ஒட்டுமொத்த உலக மக்களுக்கும் இல்லையென்பதுதான் உண்மை. கொவிட் தொற்றின் பாதிப்புகளை இலங்கை மக்களும் அனுபவித்து வந்துள்ளனர் என்பதை மறந்து விடலாகாது. ஆகவே கொவிட் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

கொவிட் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்குரிய வழிகள் எவையென்பது நமது மக்களுக்குத் தெரியாத விடயமல்ல. கொவிட் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மிகப் பிரதானமானது முகக்கவசம் ஆகும்.

கொவிட் நோயாளி ஒருவரிடமிருந்து நீங்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாவதிலிருந்து முகக்கவசம் உங்களுக்கு அதிகூடிய பாதுகாப்பைத் தருகின்றது. அதேசமயம் நீங்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியிருந்தால், நோய்க்கிருமிகளை நீங்கள் மற்றவருக்குப் பரப்புவதிலிருந்தும் முகக்கவசங்கள் பாதுகாப்பு வழங்குகின்றன. எனவே வீட்டை விட்டு வெளியே செல்லும் சமயங்களில் முகக்கவசம் அணிந்து கொள்வதை மறந்துவிடலாகாது.

நாட்டுமக்களை மீண்டும் முகக்கவசம் அணிந்து கொள்ளுமாறு சுகாதாரத் துறையினர் அண்மையில் வேண்டுகோள் விடுத்தும் இருந்தனர்.

அதேசமயம் முகக்கவசங்கள் நல்ல தரமானதாகவும், முகத்தில் நன்கு பொருந்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். முகக்கவசம் தரமானதாக இல்லையென்றால் அதனை அணிந்து கொள்வதால் எதுவித பயனும் கிடையாது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, நாட்டில் கொவிட் பரவல் தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சுகாதாரத்துறையினர் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையிலும் ஜே.என்.01 உபபிறழ்வு பரவலாமென்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே சுகாதாரப் பிரிவினர் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.கொரோனா வைரஸின் புதிய திரிபான ஜே.என்.01 கடந்த செப்டம்பர் மாதம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் 41 நாடுகளில் பரவியுள்ளது. இலங்கையில் பரவும் அபாயம் இருக்கின்றதா என்பது தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரை அந்தத் தொற்று பரவும் அபாயம் குறைவாக இருந்த போதிலும், பொதுமக்கள் அவதானமாக செயற்படுவது பாதுகாப்பானதாகும். நாட்டில் கொவிட் கட்டுப்பாட்டுக்கான பரந்த தடுப்பூசி திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்தாலும், நாட்டு மக்கள் இத்தொற்றில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு முகக்கவசம் அணிந்து கொள்வது உகந்தது ஆகும்.

முன்னைய கொவிட் காலத்தில் கடைப்பிடித்ததைப் போன்று மீண்டும் முகக்கவசம் அணியுமாறு ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்ப்பீடனம் உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

editor.tkn@lakehouse.lk

# ‘தெளிவத்தை ஜோசப் கதைகள்’, ‘கொலுஷா’ சென்னையில் செவ்வாயன்று வெளியீட்டு விழா


இலங்கையின் முன்னணி சிறுகதை எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப் எழுதிய ‘தெளிவத்தை ஜோசப் கதைகள்’, சிங்களத்தில் சாலிய குணவர்த்தன எழுதி தமிழில் மலரன்பன் மொழிபெயர்த்த தொகுப்பான ‘கொலுஷா’ (பிறமொழிச் சிறுகதைகள்) ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளின் வெளியீட்டு விழா தமிழ்நாடு, டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன்





தலைமையில் நடைபெறும். இவ்வெளியீட்டு விழாவில் முன்னணி கவிஞர் சல்மா முன்னிலை வகிக்க, பிரதம விருந்தினராக தமிழ்நாடு அரசின் இலங்கை தமிழர் நலன் ஆலோசனைக்குழு உறுப்பினரும், மூத்த பத்திரிகையாளருமான கோவி.லெனின் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் குமார் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மலையக சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளர்களான மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்கிரமசிங்க, கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழு சார்பில் இந்நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழகத்தின் முன்னணி எழிலினி பதிப்பக கோ.ஒளிவண்ணன் ‘தெளிவத்தை ஜோசப் கதைகள்’ என்ற தொகுதியையும், அட்டன் யூனிவர்சல் பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர், எம்.மெய்யநாதன் ‘கொலுஷா’ என்ற தொகுதியையும் பதிப்பித்துள்ளனர்.




இவ்வெளியிட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுகுழு செயலாளர் எச்.எச்.விக்கிரமசிங்க, எம்.ஜி.ஆர் ஜானகி கலை அறிவியல் கல்லூரி அலுவலக சிரேஷ்ட அதிகாரி கவிதா ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். இதன் மற்றுமொரு வெளியீட்டு விழா சென்னை புத்தகக் கண்காட்சியில் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**எஸ்.மரதன் கிருஷ்ணன்...**

# ஹோல்புறூக் விஞ்ஞானக் கல்லூரி மாணவர்கள் கரம் போட்டியில் சாதனை

மலையகப் பகுதியில் கரம் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில் மெரினாஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த திறந்த கரம் போட்டி மெராயா தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் 50 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றியன. தனிநபர் போட்டியில் எஸ். டிலான் முதலாமிடத்தையும், பி. கபிலாஸ் இரண்டாம் பெற்றனர்.

இரட்டையர் போட்டியில் பங்குபற்றிய ஹோல்புறூக் விஞ்ஞான கல்லூரி மாணவர்களான புஷ்பராஜ் துவாரக்ஷான், சிவகுமார் பிரகதீஸ் ஆகிய இருவரும் இணைந்து மிகவும் சிறப்பாக விளையாடி அனைத்துச் சுற்றிலும் வெற்றிப்பெற்று, இறுதிச் சுற்றுக்கு தெரிவாகி பார்வையாளர்களின் அமோக வரவேற்புடன் 2023 ஆம் ஆண்டுக்கான சாம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்டனர். இந்நிகழ்வில் மெராயா பாடசாலை அதிபர் என். கிருஷ்ணராஜ் கலந்து கொண்டார். இப்போட்டியை மிகவும் சிறப்பான முறையில் வீ.விஷ்வநாத், யூ.கிருஷ்ணா, ரீ. கிருஷ்ணகுமார், எஸ். மினோசன் ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*





# லட்சத்தீவு அழகில் தன்னையே பறிகொடுத்த பிரதமர் மோடி!

இந்தியப் பிரதமர் மோடி சமீபத்தில் லட்சத்தீவு சென்றிருந்த நிலையில், அது தொடர்பாக மிகவும் நெகிழ்ச்சியான ஒரு பதிவை அவர் பதிவிட்டுள்ளார். அவரது இந்த படங்கள் இணையத்தில் பரபரப்பாகி வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் மோடி தமிழ்நாடு வந்திருந்தார். திருச்சியில் புதிய ஒருங்கிணைந்த விமான நிலையம் உள்ளிட்ட பல திட்டங்களை அவர் திறந்து வைத்தார். மேலும், பல புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

அதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி அன்றைய தினமே லட்சத்தீவிற்கு சென்றிருந்தார். அங்கும் அவர் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இதற்கிடையே லட்சத்தீவில் எடுக்கப்பட்ட படங்களைப் பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்

பிரதமர் மோடி லட்சத்தீவில் ‘ஸ்நோர்கெலிங்’ செய்துள்ளார். ‘ஸ்நோர்கெலிங்’ என்பது வாயில் ஒரு குழாயை வைத்துச் சுவாசித்துக் கொண்டு கடலில் நீந்தும் ஒரு முறையாகும். லட்சத்தீவில் பிரதமர் மோடி ‘ஸ்நோர்கெலிங்’ செய்த நிலையில், அந்தப் படங்களை அவர் பகிர்ந்துள்ளார். லட்சத்தீவின் அழகிய கடற்கரையில் அதிகாலை நடைப்பயிற்சி செய்வது மகிழ்ச்சியைத் தருவதாக அவர் பதிவிட்டுள்ளார்.

லட்சத்தீவு சென்ற பிரதமர் மோடி அந்த பயணத்தில் 1,150 கோடி ரூபா மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது. லட்சத்தீவு பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி இப்போது டெல்லிக்குத் திரும்பிவிட்டார். இந்தச் சூழலில் தான் அவர் லட்சத்தீவு படங்களைப் பகிர்ந்து கொண்டார், இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "சமீபத்தில், லட்சத்தீவு மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த





தீவுகளின் பிரமிக்க வைக்கும் அழகையும் அதன் மக்களின் நம்பமுடியாத அரவணைப்பையும் கண்டு நான் இன்னும் பிரமிப்பில் இருக்கிறேன். அகத்தி, பங்காரம், கவரத்தி போன்ற பகுதிகளில் உள்ள மக்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள மக்களின் விருந்தோம்பலுக்கு நான் நன்றி கூறுகிறேன். லட்சத்தீவில் இருந்து எடுத்த படங்களைப் பகிர்கிறேன்.

லட்சத்தீவில் வளர்ச்சியை ஏற்படுத்தி அங்குள்ள மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். எதிர்காலத்திற்குத் தேவையான உள்கட்டமைப்பு, சிறந்த சுகாதாரம், அதிவேக இணையம் மற்றும் சுத்தமான குடிநீர் ஆகியவற்றை உருவாக்கும் அதேநேரம், உள்ளூர் கலாசாரத்தைப் பாதுகாத்துக் கொண்டாட வேண்டும் என்பதில் கவனமாக உள்ளோம். இதை மனதில் வைத்தே புதிய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளோம். அரசின் பல்வேறு திட்டங்களால் பயனடைந்தோரிடம் உரையாடினேன். எங்கள் முயற்சிகள் சிறந்த சுகாதாரம், மக்களுக்குத் தன்னம்பிக்கை, பெண்களுக்கு அதிகாரமளித்தல், விவசாயம் எனப் பல துறைகளில் வளர்ச்சிக்கு உதவுவதை நேரடியாகப் பார்ப்பது மகிழ்ச்சி தருகிறது. அங்கே நான் கேட்ட சம்பவங்கள் நெகிழ வைப்பதாக இருந்தன.

இயற்கை அழகுடன், லட்சத்தீவின் அமைதியும் மெய்சிலிர்க்க வைக்கிறது. 140 கோடி இந்தியர்களின் நலனுக்காக இன்னும் கடினமாக உழைக்க வேண்டும் என்பது குறித்துச் சிந்திக்க இது எனக்கு ஒரு சிறந்த வாய்ப்பை கொடுத்தது. புதுப்புது சாகசங்களை விரும்புவோர் நிச்சயம் லட்சத்தீவுக்கு செல்ல வேண்டும். நான் அங்கிருந்த போது ‘ஸ்நோர்கெல்லிங்’ செய்தேன். அது மிகச் சிறந்த அனுபவத்தைக் கொடுத்தது. அழகிய கடற்கரைகளில் அந்த அதிகாலை நடைப்பயணங்கள் பேரின்ப தருணங்களாக இருந்தன. லட்சத்தீவு என்பது வெறும் தீவுகளின் கூட்டமல்ல; அது மக்களின் பாரம்பரியம் மற்றும் அன்பிற்குச் சான்றாக இருக்கும் இடம். இது எப்போதும் நினைவில் நிற்கும் செழுமையான பயணமாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

# உலகெங்கும் அழிந்து வரும் பறவையினம்!



பறவைகள் இனம் அழிந்து வருவதை தடுக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும், தேசிய பறவைகள் தினம் ஜனவரி 5 (நேற்று) அன்று கொண்டாடப்படுகிறது. இது பறவைகளின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

தேசிய பறவை தினம் அமெரிக்காவில் தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 5 அன்று இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. 1894 ஆம் ஆண்டு, பென்சில்வேனியாவின் ஒயில் சிட்டியில் உள்ள பாடசாலைகளின் கண்காணிப்பாளரான சார்லஸ் அல்மான்சோ பாப்காக், இந்த நாளை தேசிய பறவை தினமாக கொண்டாடுவதற்கான முதல் விடுமுறையை அறிவித்தார்.

பல காரணிகளால் அழிவின் விளிம்பில் இருக்கும் அனைத்து வகையான பறவைகள் இனம் அழிந்து வருவதை தடுக்கும் விதமாகவும், அவற்றின் பாதுகாப்பு குறித்த விழிப்புணா்வை இந்த நாள் நோக்கமாக கொண்டுள்ளதால் தேசிய பறவைகள் தினம் முக்கியத்துவம் வாய்ந்தது. 'மனிதன் இல்லாத உலகில், பறவைகளும், விலங்குகளும் உயிர் வாழும்; ஆனால், பறவைகளும், விலங்குகளும் இல்லாத உலகில், மனிதர்கள் உயிர் வாழ முடியாது' என்றார், தன் வாழ்நாளின் பெரும் பகுதியை, பறவைகள் தொடர்பான ஆய்வுக்காக செலவழித்த சலீம் அலி.

எனவே, பறவைகளை பாதுகாப்போம். பறவைகளின் முக்கியத்துவம் பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது ஒவ்வொரு கடமையாகும். பறவைகளின் உயிர்வாழ்வும் நல்வாழ்வும், இயற்கையையும் அவற்றின் வாழ்விடத்தையும் மனிதர்களாகிய நாம் எவ்வாறு பாதுகாக்கிறோம் என்பதைப் பொறுத்தது.

சுற்றுச் சூழலை சமநிலையில் வைத்துக் கொள்வதில், பறவை இனங்களின் பங்களிப்பு மிக முக்கியம். நம் கண் முன்னே இயற்கை, தன் அழகை கொஞ்சம், கொஞ்சமாக அழகிழந்து வருவதை கண்கூடாக காணுகிறோம். இதே நிலை நீடித்தால், இயற்கை எப்படி இருக்கும் என்பதை நம் எதிர்கால சந்ததியினருக்கு சித்திரத்தில் சொல்லிக்கொள்ளும் நிலை தான் மிஞ்சும்.

ஒரு நாடு வளமிக்கதாக காட்சியளிக்கிறது என்றால், நாம் ஒன்றை நன்கு உணர்ந்தாக வேண்டும். அதாவது, அந்த நாட்டின் வனப்பகுதி வளம் மிக்கதாக இருக்கிறது என்று. நாள் தோறும் இயற்கை நமக்கு புதிய, புதிய விஷயங்களை நமக்கு காட்சிப்படுத்துவதோடு, கற்பித்தும் வருகிறது.மனிதர்களின் பேராசை பிடியில், இயற்கை தன் வளத்தை, மெல்ல, மெல்ல இழந்து வருகிறது. இயற்கையின் மிக அழகான படைப்புகளில், பறவைகளுக்கு மிக முக்கிய இடம் உண்டு. பறவையியல் ஆய்வாளர்களில் முன்னோடி, இந்தியாவின் 'பறவை மனிதர்' என்று அழைக்கப்படும் சலீம் அலி ஆவார்.

தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதில் இவர் ஈடுபட்டார்

பறவைகள் தங்களின் இனப்பெருக்கத்திற்காக இடம்பெயரும். இப்படி குடிபெயரும் பறவை இனங்கள் குறைந்து வருகின்றன. நீர்நிலைகளில் தண்ணீர் தட்டுப்பாடு, மரங்கள் அழிக்கப்படுதல், வேட்டையாடுதல் உள்ளிட்ட காரணங்களால், அரிய வகை பறவைகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வருகிறது.


# மு.நித்தியானந்தனின் 'கூலித்தமிழ்' என்னும் மலையகத்தின் வரலாற்று ஆவண நூல்

மு.நித்தியானந்தனின் 'கூலித்தமிழ்' (2014) என்னும் ஆய்வுநூல், தென்னிந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்களாகக் கடத்திவரப்பட்ட மலையக மக்களின் துயரங்களையும் ஆங்கில ஏகாதிபத்தியத் துரைமார்களின் ஒடுக்குமுறைகளையும் பேசுகின்றது. தமிழிலக்கியம் அரிதாகவே தீண்டிய தமிழர்களின் கறுப்புப் பக்கங்களை இந்நூல் பேசுகின்றது. இது ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷார் உலகம் முழுக்கத் தங்களுடைய ஆட்சிப்பரப்பை வியாபித்திருந்த நிலையில், காலனித்துவ நாடுகளில் தங்களுடைய தொழிற்பரப்பை விரிவுபடுத்தவும், வீதிகள் அமைக்கவும், மலைகளைக் குடைந்து ரயில்பாதைகளை உருவாக்கவும், நெல்வயல்கள் அமைக்கவும், கரும்பு, தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியவும் மலிவான கூலிக்கு நிறைவான உழைப்பைத் தரக்கூடிய மனித இயந்திரங்கள் தேவைப்பட்டன. வெள்ளை முதலாளிகளின் இத்தேவைகளை நிறைவேற்ற ஒப்பந்த முறையில் கூலிகள் தேவைப்பட்டனர். கூலிகளைக் கொண்டுவர இதற்கென்றே கங்காணிகள் உருவாக்கப்பட்டனர்.

தென்தமிழகத்தில் சமூக, பொருளாதாரத் தளங்களில் வலுவற்ற, ஒடுக்கப்பட்ட மக்களைக் குறிவைத்து, பிரிட்டிஷாரின் காலனித்துவ காலத்தில் கங்காணிகளால் ஆசை வார்த்தைகள் கூறப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறாகக் கூட்டிச் செல்லப்பட்ட தமிழர்களை 'கூலி' என்ற இழிவான சொல்லாலேயே குறித்தனர். இவர்களுக்கு வழங்கப்படும் கூலி, 'கூலிச் சம்பளம்' என்றே குறிக்கப்பட்டது.இவர்களிடையே மதப் பிரசாரம் செய்த கிறிஸ்தவ மிஷன் 'கூலி மிஷன்' என்றே குறிப்பிடப்பட்டது. இவர்கள் தமிழர்களாக இருந்ததால், 'கூலித் தமிழர்கள்' என்று அழைக்கப்பட்டு, அங்கிருந்த மற்றைய இலங்கை மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டனர். இக்கூலிகளிடம் உரையாட துரைமார்கள் கல்வி கற்க








வேண்டியிருந்தது. அதாவது, கூலிகளின் தமிழைக் கற்கவேண்டியிருந்தது. இதுவே 'கூலித்தமிழ்'. இந்நூல் கூலிகள் பேசும் மொழியை மட்டும் போதிக்கவில்லை. அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் குறித்தும் சொல்கிறது.

இழிவான முத்திரையுடன் வாழ்ந்து மடிந்த நம் முன்னோர்களின் வாழ்வியல் குறித்த ஆவணமாக, மு.நித்தியானந்தன் அவர்களின் 'கூலித்தமிழ்' திகழ்கின்றது.1869 முதல் மலையகத்தின் தோட்டங்களில் கண்டக்டராகப் பணியாற்றிய ஆபிரகாம் ஜோசப் என்பவர் எழுதிய 'கோப்பிக்கிருஷிக் கும்மி' என்ற நூலே மலையகத்தின் முதல் நூலாக ஆசிரியரால் குறிப்பிடப்படுகிறது. ஆங்கிலேயரின் துரைத்தனத்தைத் துதி பாடுவதற்காகவே எழுதப்பட்ட இந்நூலே துரதிர்ஷ்டவசமாக மலையகத்தின் எழுத்து இலக்கியத்திற்குச் சான்று பகர்கிறது.இந்நூலே மலையகத்தின் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகால சரித்திரத்தைத் தேடிக்கொடுத்துள்ளதாக நூலாசிரியர் பதிவு செய்துள்ளார்.

கோப்பித் தோட்டங்களில் தமிழர்களின் உழைப்பு சாறாகப் பிழியப்படும்போது, அவ்வலியிலிருந்து மீள, அவர்கள் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடினர்.அதற்கு மாறாக, தமிழர்களின் நாட்டுப்புறப் பாடல்களின்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகவே இந்நூலைக் காண்கிறார் நூலாசிரியர்.

இந்நூல் கோப்பிப் பயிர்ச் செய்கைக்கான கைந்நூல் எனினும் இந்நூலின் வாயிலாக தமிழர்களுக்கெதிரான மிகப்பெரிய தாக்குதலையே ஆபிரகாம் ஜோசப் தொடுத்துள்ளார்.

'கூலித் தொழிலாளர்களைத் துரைமார்கள் குடும்பத் தலைவனைப்போலப் பாதுகாப்பர்; நல்ல தங்குமிடம், காற்றோட்ட வசதி, நோய்களுக்குத் தடுப்பூசி போன்றவை சிறப்பாகக் கிடைக்கும்' என்பன போன்ற ஆசை வார்த்தைகளைக் கங்காணிகள் கூறியுள்ளனர். திருவிதாங்கூரிலிருந்து இலங்கையின் கோப்பித் தோட்டத்திற்குக் கூலியாகச் சென்ற ஒருவன், தான் உழைத்த பணத்தைக் கவனமாகச் சேர்த்து, இப்போது திருவிதாங்கூர் கோப்பித் தோட்டப்பகுதியில் மிகப் பெரிய தோட்டச் சொந்தக்காரனாக இருப்பதாக திருவிதாங்கூர் அரசர் பேசியுள்ளார். அரசரின் இக்கருத்தை வில்லியம் டிக்பி போன்ற ஆங்கிலேய அறிஞர்கள் தமது கட்டுரையில் மேற்கோளாகக் காட்டியுள்ளனர். தமிழர்கள் ஏமாற்றப்படும் இந்நிகழ்வினை ஸி.வி.வேலுப்பிள்ளை, தன்னுடைய 'நாடற்றவர் கதை' என்னும் நூலில் விளக்கிக் கூறுகிறார்.

நீக்ரோ அடிமைகளைச் சந்தையில் விலைக்கு வாங்கியதற்கு ஒப்பாகும் இது என்கின்றனர் வரலாற்றாய்வாளர்கள். இவ்வாறாக ஆசை வார்த்தைகளைக்கூறி அழைத்துச் செல்லப்படும் தமிழர்கள் முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர். ஆயிரம்பேர் தங்க வேண்டிய இடத்தில் பத்தாயிரம் பேர் தங்கவைக்கப்பட்டனர்.தொற்றுநோய் நீக்கம் என்ற பெயரில் நோய்த் தடுப்பூசி போட்டுக்கொள்ளக் கட்டாயப் படுத்தப்பட்டனர். தடுப்பூசி போட்டுக் கொண்டதன் அடையாளமாக சூட்டுக்காயைக்கொண்டு சூடு போட்டுள்ளனர். இந்தச் சூட்டுத்தழும்பு தடுப்பூசி போட்டுக்கொண்டதன் அடையாளம் என்று கூறப்பட்டாலும், அவன் அடிமை என்பதை உறுதிப்படுத்தவே போடப்பட்டது.

வறுமையிலிருந்து தப்பிப் பிழைக்க தமிழர்கள் மேற்கொண்ட பயணத்தில் இறந்தவர்கள் போக, எஞ்சியவர்களுக்குப் பேராபத்து காத்திருந்தது. இது ஆடு நரிக்குப் பயந்து புலியிடம் மாட்டிக்கொண்டது போல்தான் இருந்தது. தேயிலைத் தோட்டத்திற்குச் செல்லும் வழிகளிலெல்லாம் பிணங்கள் செத்துக் கிடந்ததாகவும், சுமார் மூன்று இலட்சம் தமிழர்கள் காணாமல் போனதாகவும் ஒரு வெள்ளைத்துரை பதிவு செய்துள்ளார்.

**தொழிலாளர்களாகக் கொண்டுவரப்பட்ட மலையக மக்களின் துயரங்களையும், ஆங்கில ஏகாதிபத்தியத் துரைமார்களின் ஒடுக்குமுறைகளையும் விபரிக்கும் மூலாதாரம்!**

தாய்மண்ணில் வறுமைக்குப் பயந்த தமிழன் இலங்கையில் தேயிலைத்தோட்டத்திற்கு உரமானான். இக்கொடுமைகளிலிருந்து தப்பிக்க முயற்சித்தவர்களைத் தண்டிப்பதற்கு பிடிவிறாந்து, சிறைச்சாலை போன்ற அமைப்புக்களும் இருந்துள்ளன. தப்பிச் செல்லும் எண்ணத்தில் தப்ப முயற்சித்து பிடிபட்ட ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சிறைச்சாலை என்ற பெயரில் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

பொதுவாகவே புலம்பெயர் இலக்கியங்களில் ஓங்கி ஒலிக்கும் தாய்மண் ஏக்கம் மலையகத் தமிழர்களின் பாடல்களிலும் ஒலிக்கிறது. தங்களுக்கெனத் தனிப் பாரம்பரியம் கொண்ட தமிழர்களுக்கு, புலம்பெயர் நாட்டின் கொடுமைகள் தாய்மண் மீதான பழைய நினைவுகளை மீட்டெடுக்கிறது. அவர்களின் ஆயிரம் ஆண்டுகாலப் பெருமைகள் நாட்டுப்புறப் பாடல்களில் வெளிப்பட்டுள்ளது.

தமிழ் தெரியாத வெள்ளையர்களுக்கு வேலையாளிடம் வேலை வாங்க என்ன தெரியவேண்டுமோ அது மட்டுமே 'கூலித் தமிழ்' என்னும் பெயரில் அக்காலத்தில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.இந்நூலை ஆக்கிய டபிள்யு.ஜி.பி.வெல்ஸ் என்னும் ஆங்கிலேய அதிகாரி, "கூலிகளின் இலக்கணமில்லாத மொழியைக் கற்றுக் கொள்ளவும், கூலி சொல்வதைப் புரிந்து கொள்ளவும் உதவக்கூடிய ஒரு நூலை சின்னத்துரைமாரின் கரங்களுக்கு வழங்குவதே எனது ஒரே நோக்கம்" என்று கூறுகிறார். ஒரு கூலிக்கு ஆணையிடும் நோக்கிலேயே இந்த நூல் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

இந்தியத் தமிழர்களுக்கெதிரான துரைத்தனத்தின் ஒடுக்குமுறைகளுக்கெதிராகக் குரலெழுப்பிய மனிதாபிமானி கருமுத்து தியாகராசரின் பணி குறித்து இந்நூலிலே எழுதப்பட்டுள்ளது.

மலையக மக்களுக்காக எழுதியும், பேசியும், சட்டசபையில் முழக்கமிட்டும் அவர்களுக்காக முதல் தொழிற்சங்கத்தை அமைத்த கோ.நடேசய்யர் போன்றோர் பற்றிய பல அரிய வரலாற்றுண்மைகள் இந்நூலிலே கூறப்பட்டுள்ளன.

வரலாறுகளும் ஆய்வுகளும் மன்னர்களுடையதும், சமூகத்தின் உயர்நிலையில் வாழ்ந்த மக்களுடையதாகவுமே இருந்திருக்கின்றன. ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுடைய வாழ்க்கை மிகக் குறைவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதாரமற்றுப்போன, மறைக்கப்பட்ட, ஆவணப்படுத்தப்படாத மலையக மக்களின் வரலாற்றினை 'கூலித்தமிழ்' என்னும் ஆய்வு நூல் பதிவு செய்ததன் வாயிலாக, மலையக வரலாற்று ஆவணமாக இந்நூல் பரிணமித்துள்ளது.

இரா.செங்கொடி
உதவிப்பேராசிரியர்
தமிழகம்

# அயோத்தியில் இராமர் கோயில் திறப்பு விழாவுக்காக ஹோட்டல் அறைகளுக்கு வந்துள்ள கிராக்கி!

அயோத்தியில் புதிய இராமர் கோயில் திறப்பு விழா நெருங்கி வரும் நிலையில் அந்தப் புனித நகரில் தங்குவதற்கான ஹோட்டல் அறைகள் புக்கிங்குகள் திடீரென 70 சதவீதம் அதிகரித்துள்ளன. இந்தியாவின் சுற்றுலாத்துறை மிகப் பெரிய மாற்றத்தையும் வளர்ச்சியையும் சந்தித்து வருகிறது. ஓயோ ஆப் யூசர்களில் பெரும்பான்மையானவர்கள் புனித தலங்களைச் சுற்றிப் பார்க்க ஆசைப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வழக்கமான பீச், ஹில் ஸ்டேஷன்களை விட இப்போது புனித யாத்திரைதான் முக்கிய சுற்றுலாவாக விளங்குகிறது. அயோத்தியில் புதிய இராமர் கோயில் ஜனவரி 22 ஆம் திகதியன்று பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்படுகிறது. இந்த நிலையில் அயோத்தியில் ஹோட்டல் அறை புக்கிங் 70 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேவேளையில் கோவா 50 சதவீதமும் நைனிடால் 60 சதவீதமும் ஹோட்டல் மற்றும் ரிசார்ட்டுகள் புக்கிங்கில் முன்னிலையில் உள்ளன.

இது பற்றி ஓயோ நிறுவனர் ரிதேஷ் அகர்வால் டுவிட்டரில் பதிவிட்டுள்ளதாவது:

சுற்றுலாப் பயணிகளின் விருப்பங்கள் ஆச்சரியப்படத் தக்க வகையில் மாறியுள்ளன. வழக்கமாக கோடை வாசஸ்தலங்கள், மலை வாசஸ்தலங்கள், கடற்கரைகளுக்குத்தான் சுற்றுலாப் பயணிகள் படையெடுப்பர். ஆனால் இப்போது புனிதத் தலங்களுக்குச் செல்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்திய சுற்றுலாத் துறையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் புனித தலங்கள் மற்றும் புனித யாத்திரைகள் டூர் பேக்கேஜுக்கு மிக அதிகமான தேவை இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். அயோத்தியில் புதிய இராமர் கோயில் திறக்கப்படவுள்ளநிலையில் இதுவரை இல்லாத அளவுக்கு அயோத்தியில் ஹோட்டல் அறைகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. கோயில் திறப்பு விழாவை முன்னிட்டு ஜனவரி 16 முதலே ஆகம பூஜைகள் உள்ளிட்ட சம்பிரதாயங்கள் தொடங்குகின்றன.



இதனால் இப்போதே ஹோட்டல்களில் அறைகள் பிடிப்பதற்கு பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது. அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்ட மகரிஷி வால்மீகி சர்வதேச விமானநிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமையன்று திறந்து வைத்தார்.

கிட்டத்தட்ட ரூ.15,000 கோடி செலவில் இந்த விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் ஏகப்பட்ட செலவில் அயோத்தி ரயில் நிலையம் புத்தம் புதுமெருகுடன் சீரமைக்கப்பட்டுள்ளது. அதையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார். டெல்லி, தர்பங்கா நகரங்களை அயோத்தியுடன் இணைக்கும் வந்தே பாரத் மற்றும் அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை கொடியசைத்து பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அயோத்தியில் திறக்கப்படவுள்ள புதிய இராமர் கோயில் உள்ளூர் மற்றும் வெளியூர், வெளிநாட்டு பக்தர்களிடையே பெரும் ஆவலையும் பரவசத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# பறகஹதெனிய மக்களுக்கு கல்விப்பணி புரிந்த எஸ். எம். ராஸிக் காலமானார்



பறகஹதெனிய, கதிர் வாங்கையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ். எம். ராஸிக் கடந்த 22122023 வெள்ளியன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற எஸ். எச். சலாஹுதீன் மற்றும் ஐ. எல். உம்மு குல்சூம் தம்பதிகளின் புதல்வராவார்.

19431001 இல் பிறந்த அன்னார் பறகஹதெனிய மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். 1960 ஆசிரிய சேவையில் இணைந்தார். 1975 இல் பேராதனைபல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தை பூர்த்தி செய்தார்.

சுமார் முப்பது வருட ஆசிரிய சேவையின் பின்னர் 1991 இல் இளைப்பாறினார். அதன் பின்னரும் தனது மாணவர்களுக்கும், மாணவர்களின் பிள்ளைகளுக்கும் பல பிரத்தியேக இலவச வகுப்புகள் நடத்தினார். இதன் மூலம் பறகஹதெனிய மண்ணில் மாணவ சமுதாயத்தின் நன்மதிப்பினைப் பெற்ற ஓர் மனிதராகத் திகழ்ந்தார்.

அன்னாருடன் சமகாலத்தில் பறகஹதெனிய ம.ம.வி இல் கல்விப் போதனைகளில் ஈடுபட்ட அன்னாரின் பாரியார் ஏ. ஆர். எச். சகியா ஆசிரியையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியவர். இருவரும் சிறந்த ஆசிரியத் தம்பதிகளாக 1980, 1990 களில் பறகஹதெனிய மாணவச் சமுதாயத்தின் நன்மதிப்பினைப் பெற்றவர்களாவர்.

அதேவேளை மறைந்த; எஸ். எம். ராஸிக் ஆசிரியர் பறகஹதெனிய மண்ணில் உதித்த மார்க்கப் போதகர் அஷ் ஷேய்க் அப்துல் ஹமீத் அல்பக்ரீ தர்வேஷ் (ரஹ்) உடன் தனது சிறு பராயம் முதல் ஒன்றாக இருந்து சேவை செய்யும் பேறு பெற்றிருந்தார். அக்காலகட்டத்தில் பல மாணவர்களுக்கு அல் குர்ஆன் ஓதுவதற்கும் கற்றுக்கொடுத்துள்ளார்.

இக்பால் அலி

# இராமர் கோயில் கும்பாபிஷேகத்தில் பிரதமர் மோடிக்கு வந்துள்ள சிக்கல்!

## இராமர் சிலையை மோடி தனது கையால் தொடுவது கண்ணியத்தை மீறிய செயல்!

அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெற உள்ளது. அன்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடியால் கோயில் கருவறையில் இராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. இந்தச் சிலையை பிரதமர் மோடி எடுத்து வருவதற்கு பூரி சங்கராச்சாரியாரான சுவாமி நிச்சலானந்தா சரஸ்வதி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். மேலும் அயோத்தி கும்பாபிஷேகத்துக்கு செல்ல மாட்டேன் என அவர் கண்டிப்பாகத் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் பணி தொடங்கியது. கோயில் கட்டும் பணிக்காக ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த சேத்ரா அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. 2020 ஒகஸ்ட் மாதம் இராமர் கோவில் கட்ட பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

இதையடுத்து பணிகள் விறுவிறுப்பாக தொடங்கி நடைபெற்றன. சுமார் 70 ஏக்கர் நிலத்தில் பிரமாண்டமாக இராமர் கோவில் அமைந்துள்ளது. 3 அடுக்குகளாக நாகரா கட்டகலைக்கலை நுட்பத்தில் இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது. மொத்தம் 161 அடி உயரத்தில் கோயில் அமைந்துள்ளது.

இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து காணிக்கையாகப் பெறப்பட்ட செங்கற்கள், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து வெட்டி கொண்டு வரப்பட்ட கற்கள் உதவியுடன் கோவில் கட்டப்பட்டது. தற்போது முதற்கட்ட பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் அயோத்தி இராமர் கோயில் எதிர்வரும் 22 ஆம் திகதி கும்பாபிஷேகத்துடன் திறக்கப்பட உள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார். மேலும் கும்பாபிஷேக தினத்தில் பிரதமர் நரேந்திர மோடி கோயில் கருவறையில் நிறுவப்பட உள்ள 5 வயது குழந்தை வடிவ சிலையை எடுத்து வந்து வழங்க உள்ளதாகவும், அதன்பிறகு கோயிலில் அந்த சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் கும்பாபிஷேகத்தில் பிரதமர் மோடி இராமர் சிலையை தொட்டு எடுத்து வருவதற்கு பூரி மடத்தின் சங்கராச்சாரியான சுவாமி நிச்சலானந்தா சரஸ்வதி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியுள்ளதாவது:

ஜனவரி 22 ஆம் திகதி அயோத்தியில் நடக்கும் இராமர் கோயில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்க வேண்டி அழைப்பிதழ் கிடைத்துள்ளது. அதில் ஒருவருடன் விழாவுக்கு வரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் பங்கேற்க போவது இல்லை.

பிரதமர் கடவுள் சிலையைத் தொட்டு பிரதிஷ்டை செய்யும்போது நான் அங்கு நின்று கைகளை தட்டி கொண்டாட வேண்டுமா? இது கலாசாரத்துக்கு எதிரானது. இராமர் சிலையை பிரதமர் மோடி தொடுவது என்பது கண்ணியத்துக்கு எதிரானது. இதனால் நான் அங்கு செல்லப்போவது இல்லை.இராமர் சிலை பிரதிஷ்டையில் கண்ணியம் மீறப்படுவதை என்னால் பார்க்க முடியாது. நான் அதனை பார்க்க விரும்பவில்லை.





மேலும் இராமர் கோயில் சிலை பிரதிஷ்டை என்பது சாஸ்திரப்படி நடக்க வேண்டும். இராமர் கோயில் விஷயத்தில் நடத்தப்படும் அரசியல் தொடரக் கூடாது. தற்போதைய சூழலில் மத வழிபாட்டுத் தலங்கள் என்பது சுற்றுலாத்தலமாக மாற்றப்படுகின்றன. இது ஆடம்பர விஷயங்களை அங்கு சேர்க்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் என்பது சரியானது இல்ல" என அவர் கண்டிப்பாகக் கூறியுள்ளார். இதேவேளை மக்கள் கூட்டத்தை தவிர்க்கும் நோக்கில் இராமர் கோயில் திறப்பு விழாவுக்கு வர வேண்டாம் என பொது மக்களை பிரதமர் மோடி கேட்டு கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் மோடி இந்திய வாக்காளர்களுக்கு பொருளாதார வளர்ச்சியின் அவதாரமாகவும், குஜராத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் காட்சிப் படுத்தப்பட்டார். அவர் அனைத்து இந்தியர்களுக்கும் வளர்ச்சியைக் கொண்டு வருவார் என்று கூறப்பட்டது.

ஆனால், 2019 ஆம் ஆண்டில், பணமதிப்பிழப்பு என்னும் பேரழிவுகரமான நடவடிக்கைக்குப் பிறகு அந்தக் கதை சரிந்த நிலையில், புல்வாமா பயங்கரவாதத் தாக்குதல், மோடிக்கு பொதுத் தேர்தலை தேசிய பாதுகாப்புத் தேர்தலாக மாற்றுவதற்கான வாய்ப்பை வழங்கியது.

அடுத்ததாக 2024ஆம் ஆண்டில், பா.ஜ.க, நரேந்திர மோடியை இந்துக்களின் இதய சக்கரவர்த்தியாக முன்னிறுத்தும் என்பது தெளிவாக தெரிகிறது என்று எதிரணிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

காங்கிரஸ் எம்.பி சசி தரூர் ராமர் கோவில் திறப்பு விழா குறித்து தனது எக்ஸ் (ட்விட்டர்) பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் கூறியதாவது: 'பிரதமர் மோடி ஜனவரி 22ஆம் திகதி அயோத்தியில் இராமர் கோயிலையும், பெப்ரவரி 14 ஆம் திகதி அபுதாபியில் அமைக்கப்பட்டுள்ள இராமர் கோவிலையும் திறக்க உள்ளார். அதன் பிறகு, விரைவில் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கிறேன். இந்த நேரத்தில், சில கேள்விகள் எழுகின்றன. நீங்கள் இந்தியாவிற்கு செய்தது என்ன?. ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் என்ன ஆனது? சமூகபொருளாதார ஏணியின் கீழ்மட்டத்திற்குப் பயனளிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு என்ன ஆனது?. ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்குகளிலும் செலுத்தக்கூடிய வருமானம் என்ன ஆனது? இந்துத்துவத்திற்கும், மக்கள் நலனுக்கு இடையே நடக்க இருக்கும் தேர்தலில் இந்த கேள்விகள் விவாதிக்கப்பட வேண்டும்" என்று சசி தரூர் தெரிவித்துள்ளார்.

## 13ஆவது திருத்தத்தின் மூலம்...

சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். 2024 – 2025 இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வருடங்களாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக கொள்கை ரீதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் மூலோபாய மாற்றங்கள் குறித்தும் அறிவுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் பெரும் சரிவை சந்தித்தது. 2020ஆம் ஆண்டில் கொவிட் தொற்று காரணமாக மேலும் சரிவடைந்தது. அந்த நிலை 2022 இல் மேலும் மோசமாக மாறியிருந்ததோடு, 7% மறைப் பெறுமானத்தை விடவும் வீழ்ச்சியடைந்தது.

அந்த நெருக்கடியான காலத்தை கடந்து 2023ஆம் ஆண்டில் ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் இயலுமை எமக்கு கிட்டியது. 2023ஆம் ஆண்டில் முதல் இரு காலாண்டுகளில் பொருளாதார வளர்ச்சி குறைவாக காணப்பட்ட போதிலும் அடுத்த இரு காலாண்டுகளில் வளர்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக நான்காம் காலாண்டில் முன்னேற்றகரமான வளர்ச்சியை காண முடிந்தது.

அந்த அடிப்படையில் இவ்வருடத்தில் 3% பொருளாதார வளர்ச்சியை பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்ப்பதோடு, 2025ஆம் ஆண்டில் 5% ஆக பொருளாதார வளர்ச்சியை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். இவ்வாறு நாம் முன்னோக்கிச் செல்ல முடியும். இவ்விரு வருடங்களும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தும் வருடங்களாகும். இன்று நாம் நாட்டின் பொருளாதார முறைமையை மாற்றியுள்ளோம். இன்று நாம் பணம் அச்சிடுவதில்லை. அச்சிடும் பட்சத்தில் ரூபாயின் பெறுமதி குறைந்து பணவீக்கம் அதிகரிக்கும். அதேபோல் வங்கிகளிடத்திலிருந்து கடன் பெறுவதும் இல்லை. எமது அரச வங்கிக் கட்டமைப்புக்களும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளன. அதனால் கடன் மற்றும் பணம் அச்சிடும் செயற்பாடுகளை விடுத்தே நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அதனாலேயே கடன் வழங்குநர்களிடத்தில் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்நாட்டின் பொருளாதாரத்தை போதிய அளவு பலப்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுந்தது.

அதனால் நாம் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். நாம் இவ்வருடத்தில் 12% மொத்த தேசிய உற்பத்தியை பெற்றுக் கொள்ள வேண்டும். இறுதியில் 15% ஆக அதனை பலப்படுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

அதனாலேயே இவ்வருடத்தில் வற் வரியை அதிகரிக்க நேரிட்டது. போதியளவு வருமானம் உள்ள பொருளாதாரம் ஒன்று எமக்கு அவசியம். அதேபோல் நாம் வரவு செலவு திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். எமது தேவைகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

எமது வருமானத்தில் அதிக தொகையை கடன் வட்டியாக செலுத்த நேர்ந்துள்ளமையே பெரும் பிரச்சினையாகும். அந்த பிழையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் அரசாங்கம் தங்களது இயலுமைக்கு மிஞ்சிய செலவுகளை செய்துள்ளது.

இவ்வாறான தவறுகளை சரிசெய்து நாம் முன்னேற வேண்டும். எனவே எமக்கு புதிய பொருளாதாரம் தேவை. நாம் திட்டமிட்ட அடிப்படையில் நாட்டில் அந்தப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி வருகின்றோம்.

இது ஒரு தொழில் வாய்ப்பை உருவாக்கும் பொருளாதாரம். மேலும் அது நமக்கு அந்நியச் செலாவணியை மேலதிகமாகக் கொடுக்கும், அதிக வருமானத்தைத் தரும் பொருளாதாரமாக இருக்க வேண்டும். அதன்போது ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரம் தொர்பில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

வடக்கு மாகாணத்தை தனித்துவமான பொருளாதார மையமாக கட்டியெழுப்ப முடியும். மேலும், வடக்கை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக உருவாக்க முடியும். வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான அனைத்து வளங்களும் இங்கு உள்ளன. வடக்கின் அபிவிருத்திக்கு மட்டுமன்றி முழு நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிக்க முடியும். அதற்கு போதுமான அதிகாரப்பகிர்வு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது. அந்த செயற்பாடுகளுக்கு 13 ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களே போதுமானது என நினைக்கின்றோம். கொழும்பில் இருந்து பணம் வரும் வரை காத்திருக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் ஜப்பான் தொடர்பில் கவனம் செலுத்தினால், ஜப்பான் சமஷ்டி ஆட்சியுள்ள ஒரு நாடு அல்ல. ஆனால் அதன் அனைத்து மாகாணங்களும் அபிவிருத்தி அடைந்துள்ளன. அதேபோன்று, கொரியா, ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகள் அந்த வளர்ச்சியை எட்டியுள்ளன. அப்படியானால் ஏன் ஒரு நாடாக எமக்குரிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது?

அதிகாரப்பகிர்வு பற்றி கதைப்பதுபோன்று, அந்த அதிகாரங்களை தமது மாகாணங்களின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். நாம் அரசியல் ரீதியாக அதிகாரப்பகிர்வு பற்றி பேசுகிறோம்.

சட்டத்தால் இந்த அதிகாரங்கள் அனைத்தையும் வழங்கலாம். ஆனால் உங்களின் மாகாணத்தை அபிவிருத்தி செய்ய போதிய பணம் இல்லை என்றால் அதன் பெறுமதி என்ன என்று நாம் கண்டறிய வேண்டும்.

அதிகாரப்பகிர்வு குறித்து நாம் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தலாம். ஆனால் இன்றைய நிலவரப்படி மேல் மாகாணத்தால் மாத்திரமே தனது சொந்த செலவை செய்ய முடிகிறது.

அதன்படி, ஏனைய அனைத்து மாகாணங்களும் மேல் மாகாணத்துடன் இணைகின்றன. எனவே, தமது மாகாணத்தை அபிவிருத்தி செய்ய, தங்கள் சொந்த மாகாணங்களுக்குள் வலுவாக இருக்க வேண்டும். உங்கள் மாகாணத்தில் ஒரு வெளிநாட்டு மொழிப் பாடசாலையை நிறுவ விரும்பினால், அதற்கு அரசாங்கம் ஏன் பணம் வழங்க வேண்டும்?

அதற்கான கேள்வி மற்றும் தேவை இருந்தால், நீங்கள் அதை எளிதாக ஆரம்பிக்க முடியும். மாணவர்கள் கல்வியைத் தொடர தேவையான உதவிகளை அரசாங்கம் வழங்குகிறது. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் கல்வி இப்படித்தான் செயல்படுகிறது. இந்த நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை சீர் செய்யத்தான் என்னால் முடியும். என தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

**( 06. 01. 2024 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
குடும்பத்தில் சலசலப்புகள் ஏற்படாமல் கலகலப்பாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம்.

**ரிஷபம்:**
வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது உத்தமம். சகோதரருக்குள் இருந்த வாக்குவாதங்கள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**மிதுனம்:**
பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து மகிழ்ச்சி படுத்தும்.

**கடகம்:**
பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சினைகள் உருவாக்கலாம். உத்தியோகத்தில் வேலை பளு அதிகரிக்கும்.

**சிம்மம்:**
பெற்றோர் வழியில் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கடல் தாண்டி செல்வதில் தாமதங்கள் உருவாகும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:**
சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடி கிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.

**துலாம்:**
தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை விலகும்.

**விருச்சிகம்:**
முத்தான தொழில்கள் வாய்க்கும் யோகம் உண்டு. முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். எதிரிகள் பலம் குறையும்.

**தனுசு:**
பங்குச் சந்தை,வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

**மகரம்:**
விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பாக்கியங்கள் வசூல் ஆகி பரவசப்படுத்தும். இடம் பூமி வாங்குவதிலிருந்த பிரச்சினை அகலும்.

**கும்பம்:**
வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:**
வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

## சின்னம்மை நோய்க்கான...

தடுப்பூசியை வழங்கும் செயற்பாட்டின் முதலாவது கட்டம் 09 மாவட்டங்களில் 1,600 சிகிச்சை நிலையங்கள் ஊடாக இன்று 06ஆம் திகதி சனிக்கிழமை துரிதமாக ஆரம்பிக்கப்படுகிறது.

2023ஆம் ஆண்டு மே மாதம் முதல் 700க்கும் மேற்பட்ட சின்னம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளதையடுத்து, இலங்கையில் இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சின்னம்மை நோய்க்கான மேலதிக தடுப்பூசி வழங்கும் திட்டத்தை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்த, உலக சுகாதார ஸ்தாபனத்துடன் (WHO) இணைந்து ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

மேலதிக தடுப்பூசி செயற்பாடு இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதன் முதலாவது கட்டம் அதிக சனத்தொகையை கொண்ட அடையாளம் காணப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் 06 09 வயது குழந்தைகளை இலக்கு வைத்து இன்று 06ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் சின்னம்மை நோய் பதிவுகள் அதிகம் காணப்படுவதால் இந்தப் பகுதிகளில் முதற்கட்டம் தடுப்பூசி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இரண்டாவது கட்டம் ஜனவரி 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருப்பதுடன், இது நாடு முழுவதிலுமுள்ள ஏனைய வயதுப் பிரிவினருக்கு விஸ்தரிக்கப்படும்.

மேலதிக தடுப்பூசி செயற்பாடு குறித்து அறிவிக்கும் முகமாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுக்ள சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் குறிப்பிடுகையில், “இலங்கையில் தேசிய தடுப்பூசி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியன பல ஆண்டுகளாக சுகாதார அமைச்சுடன் நெருக்கமாக இணைந்த பணியாற்றி வருகிறது. அதிகமானவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டாலும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத குழந்தைகள் மத்தியில் குறிப்பாக பிராந்தியத்தில் தொற்று அதிகரித்திருப்பதால் சின்னமுத்து ஏற்படலாம். சின்னமுத்து நோயாளர்கள் தொடர்பில் எண்ணிக்கை குறைவானதாக இருந்தாலும் இது குறித்து நாம் கவனம் செலுத்துவது அவசியம். இதனால்தான் சுகாதார அமைச்சு இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது” என்றார். 2020 – 2021 காலப் பகுதியில் கொவிட் 19 தொற்றுக் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் தடுப்பூசிகளின் தரத்தை பராமரிப்பதற்கு குளிர் ஊட்டல் உபகரணக் கட்டமைப்பிலுள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும், அதன் ஊடாக பயனுள்ள நோய்த்தடுப்பு நடவடிக்கையை சந்தேகத்திக்கிடமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஒத்துழைப்பு வழங்கியதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் தடுப்பூசித் திட்டம் குறித்து நம்பிக்கையை வெளியிட்டுக் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி பாலித மஹிபால குறிப்பிடுகையில், “உலகில் எந்தவொரு நாடும் 99 வீதம் நோய் தடுப்பு வழங்கலை அடையவில்லை.

ஆனால், இலங்கை இதனைப் பெற்றுள்ளது என்பதை நான் எந்தவித தயக்கமும் இன்றி உறதியாகக் கூறுவேன். எனவே, இந்த மேலதிக தடுப்பூசி வழங்கல் செயற்பாடானது சின்னமுத்து நோயைக் குறைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது” என்றார்.

## வற் வரியிலிருந்து விலக்களிப்பு...

(03ஆம் பக்கத் தொடர்)

மேலும், ஆயுர்வேத கூட்டுத்தாபனம் சுதேச மருத்துவத் துறையில் ஆயுர்வேத சிகிச்சை மையங்களான “பொடி மன்த்ர” (உடல் மந்திரம்) அறிமுகப்படுத்தவுள்ளது. இது சுதேச மருத்துவத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். ஆயுர்வேத சுகாதார நிலையங்கள் மூலம் பட்டதாரி, பயிற்சி பெற்ற மசாஜ் சிகிச்சையாளர்களின் மேற்பார்வையில் உடல் நலப் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இதனை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். உள்நாட்டில் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் இதற்காக பதிவு செய்ய அழைக்கிறோம். இது தொடர்பான பத்திரிகை விளம்பரம் இம்மாதம் 10 ஆம் திகதி வெளியாகும்.

மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள், சுதேச மருந்துகளின் உற்பத்தி மற்றும் உள்நாட்டு மூலிகைச் செடிகளின் விளைச்சலை வணிக ரீதியிலான தொழிதுறையாக தரம் உயர்த்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதுவரை வாழ்வாதார அளவில் இருந்த இச் செயற்பாட்டை, இனிமேல் வணிக அளவில் மேற்கொள்ள தயாராக உள்ளோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்” என சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் தெரிவித்தார்.

## பெப்ரவரி முதல் வாரத்தில்...

மின்சாரக் கட்டணம் மீளாய்வு செய்யப்படும் எனவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார். புதிய உற்பத்தித் திட்டத்தின்படி, 2024 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்து சுமார் 600 மெகாவாட் மின்சாரம் பெறப்படும் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, “ 2023ஆம் ஆண்டு மின்சாரத் துறையில் பல்வேறு வெற்றிகளைப் பெற்றுள்ளோம். தற்போதுள்ள மின்சார சட்டத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்து வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவையை வழங்க புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான விடயங்கள் புதிய சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மின் உற்பத்தியில் மேலும் புதுப்பிக்கத்தக்க வலுசக்திகையை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் 70% மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து மின் உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின்படி 2024ஆம் ஆண்டில் சுமார் 600 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கிறோம். மேலும், சோலார் பேனல்கள் அமைக்கும் பணியும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 10 மெகாவாட்டுக்கு குறைவான திட்டங்களுக்கு விரைவான வேலைத்திட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கிறோம். மன்னார், பூநகரி மற்றும் ஹம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கான பல்வேறு பாரிய திட்டங்கள் உற்பத்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதேபோன்று, நீர் மின்சாரம், சூரிய சக்தி மற்றும் காற்றாலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்வதன் மூலம் மின்சாரக் கட்டணத்தை மேலும் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான உரிய தரவுகள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளன. இம்மாத இறுதி அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்தில் மின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 245Kg ஐஸ் மற்றும்...

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகமும் கடற்படையினரும் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மூவர் கொஸ்கொட மற்றும் பேருவளை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் இருவர் காலி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் மற்றும் ஒருவர் கல்கமுவ பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 28, 66, 56 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா நேற்று காலி கடற்படை முகாமுக்குச் சென்று கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களை பார்வையிட்டார்.

## 17 கோடி ரூபா பெறுமதியான...

கைப்பற்றப்பட்டுள்ளன. இந்திய மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறை அதிகாரிகளால் திருச்சி, தங்கச்சிமடம் அடுத்த தர்கா பஸ் நிலையமருகே நேற்று முன்தினம் (04) இரவு இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் அதிகாரிகளை தாக்கிவிட்டு தப்பிச் சென்ற நபரை சுங்கத்துறை அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் இலங்கையில் இருந்து சமீப காலமாக அதிக அளவு கடத்தல் தங்கம் நாட்டுப் படகுகளில் தனுஷ்கோடி வழியாக தமிழகத்துக்குள் கடத்தி வரப்படுகிறது.

இந்நிலையில் திருச்சி மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தலைமன்னாரில் இருந்து கடல் வழியாக நாட்டுப்படகில் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுக கடற்கரைக்கு கடத்தல் தங்கம் கடத்தி வரப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறையினர் இராமேஸ்வரம் சுங்கத் துறை அதிகாரிகளுடன் இணைந்து இராமேஸ்வரம் கடற்கரை பகுதியில் துப்பாக்கியுடன் மறைந்திருந்தனர்.

அப்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே வந்து நின்ற நாட்டு படகில் இருந்து மர்ம நபர் ஒருவர் தங்கக் கட்டிகள் கொண்ட பார்சலை கரையில் நின்றுகொண்டிருந்த நபரிடம் கொடுத்துவிட்டு மீண்டும் படகில் புறப்பட்டு சென்றார்.

கடத்தல் தங்க கட்டிகளை பெற்று கொண்ட நபர், இரு சக்கர வாகனத்தில் அதை எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் அடுத்த தங்கச்சி மடம் தர்கா ஸ்டாப் அருகே சென்று கொண்டிருக்கும் போது அவரை பின் தொடர்ந்து சுங்கத்துறை அதிகாரிகள் வருவதை அறிந்த அந்த நபர், இருசக்கர வாகனத்தை அவ்வழியாக சென்ற ஆட்டோவில் மோதி விட்டு தப்பிக்க முயன்றுள்ளார். இதனை கண்ட அதிகாரிகள், அவரை மடக்கி பிடிக்க முயன்ற போது அதிகாரியை தள்ளிவிட்டு விட்டு இரு சக்கர வாகனத்தை போட்டுவிட்டு தப்பி சென்றார்.

இதையடுத்து அந்த இருசக்கர வாகனத்தை சோதனை செய்த போது, வாகனத்தின் முன்பகுதியில் உள்ள பையில் தங்க கட்டிகள் இருந்தது. தங்க கட்டிகளை பறிமுதல் செய்து அதிகாரிகள், இராமேஸ்வரம் சுங்கத் துறை அலுவலகத்திற்கு எடுத்து வந்து எடை போட்டு பார்த்ததில் அதில்சுமார்7.70கிலோ தங்கம் இருந்தது தெரியவந்தது. சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய முதல் கட்ட விசாரணையில் கடத்தல் தங்கத்தை விட்டு சென்ற நபர் தங்கச்சிமடத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளதாகவும் அவரை தீவிரமாக தேடி வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிடிபட்ட தங்கத்தின் மதிப்பு இந்திய மதிப்பில் சுமார் 4.50 கோடி ரூபா என்றும், கடத்தல் தங்கம் யாருக்காக கொண்டு வரப்பட்டது என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை திருச்சியில் உள்ள மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு தலைமை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றனர்.

## 2023 ஆம் ஆண்டிலேயே...

ஹெரோயின், ஹஸிஸ், கொக்கெய்ன் மற்றும் போதை மாத்திரைகள் ஆகியவற்றையே கைப்பற்றியதாகவும், அத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து கொழும்பு, நுகேகொடை, அநுராதபுரம், கண்டி, பாணந்துறை ஆகிய இடங்களில் வசிக்கும் நபர்கள் சிலருக்கு இப்போதைப்பொருள்அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டிருந்த முகவரிகளை விசாரித்த போது, அவை போலி முகவரிகளென தெரிய வந்துள்ளது. இந்நிலையில், அவை மேலதிக விசாரணைக்காக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டதாகவும், சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நாளை முதல் 13 வரை...

தீர்மானித்துள்ளது. டெங்கு நோயாளர்கள் கணிசமாக அதிகரித்து வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர், மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"தற்போது தொடரும் சீரற்ற கால நிலைக்கு மத்தியில் டெங்கு நோய் பரவும் அதிக ஆபத்துள்ள 70 வலயங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவ்வலயங்களில் டெங்கு நோய் தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை அதிகளவாக முன்னெடுக்கவும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

முப்படையினர், பொலிஸார், சுகாதார அதிகாரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் புள்ளிவிபரத் தகவல்களுக்கமைய, கடந்த வருடத்தில் (2023) 88 ஆயிரத்து 398 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டதுடன், கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகினர். டெங்கு நோயால் கடந்த வருடத்தில் மாத்திரம் 58 பேர் உயிரிழந்ததாக அத்தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

## வலி. வடக்கில்...

கூட்டத்தின் போதே அவ்வாறு கோரிக்கை விடுத்தார். இது தொடர்பில் சீ.வி.கே.சிவஞானம் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், வலி. வடக்கில் 6,371 ஏக்கர் காணிகளை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதனை 2023ஆம் ஆண்டு நீக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கூறி இருந்தார். ஆனால் இதுவரையில் அந்த அறிவிப்பு மீள பெறப்படவில்லை. இந்நிலையில் 6,371 ஏக்கர் காணிகளில் சுமார் 03 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே முதல் கட்டமாக விடுவிக்கப்பட்ட காணிகளின் அறிவிப்பையாவது மீள பெறவேண்டுமென கோரிக்கை விடுத்தேன். அதேவேளை, தற்போது உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் பிரதேசத்தினுள் உள்ள 14 இந்து ஆலயங்களுக்கும் மக்கள் சென்று வழிபாடு நடத்த அனுமதி வழங்க வேண்டுமெனவும், பலாலியில் விவசாய நடவடிக்கைக்காக 289 ஏக்கர் காணியை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவையும் விடுவிக்கப்படவில்லை. அவற்றையும் விடுவிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, உடனடியாக இந்த விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக கூறினார் என தெரிவித்தார்.

## கில்மிஷாவுக்கு ஜனாதிபதி வாழ்த்து...

யாழ்ப்பாணத்தில் வசிப்பவர் என்பதோடு, இலங்கை சிறுமியொருவர் இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் வெற்றி பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சிறுமி கில்மிஷா உதயசீலன் நாட்டுக்கு தேடித்தந்த புகழுக்காக அவருக்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி, அவரது கல்வி செயற்பாடுகள் மற்றும் இசை வாழ்விலும் வெற்றி பெற ஆசிகளை தெரிவித்தார். இதன்போது கில்மிஷா ஜனாதிபதி முன்னிலையில் பாடல் ஒன்றையும் பாடினார். அத்துடன், தனது குடும்பத்தாருடன் சந்தித்து ஷெல்பியும் கில்மிஷா எடுத்தார்.

நேற்று முன்தினம் இரவு யாழில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற நிகழ்வின் போது கில்மிஷாவை நேரில் அழைத்து பாராட்டி தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்

## IMF பிரதிநிதிகள் குழு...

தற்போதைய பொருளாதார சீர்திருத்தங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றை மதிப்பிடுவதை நோக்கமாக கொண்டே சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளின் விஜயம் அமையவுள்ளதாக, நிதி அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

# கிழக்கின் குரல்



## முச்சக்கரவண்டி சாரதிகளின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

முச்சக்கரவண்டி சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் முகமாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ. சந்திரகாந்தனுக்கும் மட்டக்களப்பு மாநகரசபை முச்சக்கரவண்டி சாரதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.





இதன்போது முச்சக்கரவண்டிசாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. நிலையான அலுவலகம் அமைப்பதற்கான காணி கோரல், தற்காலிக அலுவலகம் அமைப்பதற்கான இடம் கோரல், (Bus Stand மேற்தளம்),மட்டக்களப்பு மாநகர வரி வசூலிப்பு தொடர்பான பிணக்கு, (One Day 20/=).4.புதிய தரிப்பிடத்துக்கான பெயர்ப் பலகை இடுவதும், பழைய பெயர்ப்பலகைகளை புதுப்பித்தல், (மாநகர சபையுடன் இணைந்து) ஆட்டோ தரிப்பிடங்களின் இடங்களை உறுதிப்படுத்துதல், (வரையறை செய்தல் ),புதிதாக அமைக்கப்படவுள்ள கச்சேரி முச்சக்கரவண்டி தரிப்பிடம் தொடர்பான விளக்கம், முச்சக்கரவண்டி தரிப்பிடம் தொடர்பான பொலிஸ் முறைப்பாட்டு விசாரணையின் போது ஆட்டோ சங்க நிர்வாகத்தினையும் இணைத்து செயற்படுதல், ஒவ்வொரு தரிப்பிடத்துக்குமான தற்காலிக கூடாரங்கள் அமைத்தல், ஆட்டோ சாரதி சங்கம், பொலிஸ் திணைக்களம், மட்டக்களப்பு மாநகர சபை இணைந்து புதிதாக B இலக்கங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். மேற்படி கலந்துரையாடலின் போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வாசுதேவன், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தம்பிராஜா தஜீவரன், செயற்குழு உறுப்பினர் ரொணி பிரின்சன், பொலிஸ் பொறுப்பதிகாரி, துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட

## மக்களுக்கான நிவாரண உதவிகளை துரிதப்படுத்துமாறு அரசாங்க அதிபர் பணிப்பு

(கல்லடி குறூப்நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவந்த அடைமழை காரணமாக வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை துரிதப்படுத்துமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே. முரளிதரன் நேற்றுமுன்தினம் (04) நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களின் தேவைப்பாடுகளையும் கேட்டறிந்துகொண்டார். இதன்போது ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி மற்றும் கிரான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வெள்ள நீரினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

களவிஜயத்தின்போது ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம், கிரான் பிரதேச செயலாளர் ராஜ்பாபு, அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.ரியாஸ், மட்டக்களப்பு மாவட்ட தகவல் திணைக்கள அதிகாரி வ.ஜீவானந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## சம்மாந்துறை அல் ஹில்மா பாலர் பாடசாலை வருடாந்த கலை நிகழ்ச்சியும் பரிசளிப்பும்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சம்மாந்துறை விளினியடி 01, அல் ஹில்மா பாலர் பாடசாலை கலை நிகழ்ச்சியும் பரிசளிப்பு நிகழ்வும் பாலர் பாடசாலை தலைவர் ஐ.எம். இர்ஷாத் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும்,முன்னாள் சம்மாந்துறை பிரதேசசபை தவிசாளருமான ஐ.எல்.எம். மாஹிர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இதன்போது சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

வெருகல் பிரதேச செயலகப்பிரிவில்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு

(திருகோணமலை தினகரன் நிருபர்)

திருகோணமலை வெருகல் பிரதேச செயலகப்பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இரண்டு பாடசாலை நலன்புரி முகாம்களில் தற்காலிகமாக தங்கியிருப்போருக்கான உலருணவுப் பொதிகள் நேற்று (05) வெள்ளிக்கிழமை காலை வழங்கி வைக்கப்பட்டன.



மாவடிச்சேனை இந்து மகா வித்தியாலயம், வட்டவன் தான் தோன்றீஸ்வரர் வித்தியாலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு முகாம்களில் தங்கியிருக்கும் 271 பேருக்கு உதவிப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வெருகல் பிரதேச செயலகத்தின் ஊடாக இவ் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, பிரதி இணைப்பாளர் அழகுராசா மதன் உள்ளிட்டோர் உலருணவுப் பொருட்களை கையளித்திருந்தனர்.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாவடிச்சேனை, வட்டவன், சேனையூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 415 குடும்பங்களைச் சேர்ந்த 712 நபர்கள் நலன்புரி முகாம்களில் நான்காவது நாளாகவும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 32 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

(மருதமுனை தினகரன் விஷேட நிருபர்)



மருதமுனையைச் சேர்ந்த சித்தி பஸீறா ஆசிரியை தனது 32 வருட கல்வி சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார்.

மருதமுனையைச் சேர்ந்த தம்பிலெவ்வை, முஹம்மது செயினம்பு தம்பதிகளின் மகளான ஆசிரியை சித்தி பஸிறா தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை மடவளை அல்மதீனா தேசிய பாடசாலையிலும் கற்றார்.

அரசினால் வழங்கப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் முதல் நியமனத்தை 1992 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட அவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் சிறப்பான சேவையை ஆற்றிக் கொண்டிருக்கையிலேயே 1993 ஆண்டு பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

அதனைதொடர்ந்து 2009 ஆம் ஆண்டு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம், மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை என்பவற்றில் சிறப்பாக சேவை செய்தார்.

இவ்வாறு மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகம் அனைவராலும் மதிக்கப்படுகின்ற சித்தி பஸீறா ஆசிரியை தனது 32 வருட கல்வி பணியிலிருந்து இன்றுடன் ஓய்வு பெறுகிறார்.

## மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் நிர்வாக சபைத் தெரிவு

(மருதமுனை தினகரன் விஷேட நிருபர்)

ஆளுமைப் பெண்களின் அமைப்பான மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் 2024ம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவில் தலைவராக அப்துல் றஊப் பாத்திமா ஸூபா ஆசிரியை உப தலைவராக சித்தி நஜீபா முஹம்மட் றமீஸ், செயலாளராக ஐனுல் முன்ஸிலா நவாஸ், உப செயலாளராக எம். சிபானா அஸீம், பொருளாராக ஏ.கே. பாத்திமா பஸ்லி, கணக்காளராக ஏ.எஸ். நத்ரீன் சிதாராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் 21 உறுப்பினர்கள் உட்பட ஆலோசகர்களாக கலாநிதி மஸ்றூபா மஜீட், சிரேஷ்ட கவிஞர் நௌபல்,

சிரேஷ்ட கவிஞர் அபுல் ஹஸன், ஆசிரியை இர்பானா றம்ஸான் மற்றும் கவிஞர் விஜிலி மூஸா ஆகியோருடன் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஊடக செயற்பாட்டாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். ஷினாஸ் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸ் போன்றோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## சதொச கிளைகளை மீளத்திறக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள லங்கா சதொச கிளைகளை மீளத்திறக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்கத்தினால் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் லங்கா சதொச கிளைகளின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அனர்த்த நிலைமைகளின் போதும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி, நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு லங்கா சதொச கிளைகளின் பங்களிப்பும், சேவைகளும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. தற்போது மக்கள் பொருளாதார நெருக்கடியினால் அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியால் பல லங்கா சதொச கிளைகள் மூடப்பட்டுள்ளன.

பலவருட காலமாக இயங்கி வந்த நிந்தவூர், அட்டாளைச்சேனை, பாலமுனை , மத்திய முகாம், சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய லங்கா சதொச கிளைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் கூட லங்கா சதொச மூலம் அதன் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிண்ணியாப் பிரதேசத்தின் உப்பாறு, சோலைவெட்டுவான், மைலாப்பன்சேனை, காரைவெட்டுவான், கண்டல்காடு போன்ற கிராமங்களுக்கான நிவாரண உதவிகள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யினால் வழங்கிவைக்கப்பட்டது. இதன்போது கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கணியும் கலந்துகொண்டார். (படம்: கிண்ணியா மத்திய நிருபர்)

## நிந்தவூரில் சேகரிக்கப்படும் தெருக்கழிவுகளை அகற்றுவதற்கு பொருத்தமான இடமில்லை

### பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

நிந்தவூர் பிரதேசசபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பாதசாரிகள் மற்றும் குடியிருப்பாளர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உள்ளூராட்சிமன்ற கட்டளை சட்டத்திற்கு அமைய பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு தொல்லை அளிக்கின்ற கட்டாக்காலிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்த நிறுவங்கள் அலட்சியமாக இருப்பதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

அத்துடன் அண்மைக்காலமாக தெருலாம்பு பராமரிப்பு மற்றும் தெருக் கழிவு முகாமைத்துவம் போன்ற செயற்பாடுகள் உரியவாறு மேற்கொள்ளப்படாமல் உள்ளதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்க்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக நிந்தவூர் பிரதேசத்திலுள்ள சிவில் சமூக ஆர்வலர்கள் குழுவினர், நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் திருமதி ரி.பரமேஸ்வரனை நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து வலியுறுத்தினர்.

இக்குழுவில் நிந்தவூர் 24 மற்றும் 25 ம் பிரிவு கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளான அல் ஹாஜ் ஏ எம் அஸீஸ், றிபாட் யாசீன், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ புஹாது, உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்



இதன் போது கருத்து தெரிவித்த நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் ரீ பரமேஸ்வரன், தெருக்களில் பொது மக்களுக்கு இடையூறாக திரியும் கட்டாக்காலி மாடுகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற கட்டளை சட்டத்திற்கு அமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்

அத்துடன் தெருலாம்பு பராமரிப்பு வேலைகளை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை சீராக முன்னெடுக்க ஆளணி தட்டுப்பாடு உள்ளதுடன், சேகரிக்கும் தெருக் கழிவுகளை முறையாக அகற்றுவதற்குரிய பொருத்தமான இட வசதி இல்லாத உள்ளது. இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம் சி பைசல் காசிம் நிந்தவூர் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். பொருத்தமான தீர்வு கிடைக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்

## கல்முனை மாநகர சபையில் Onestop Service அங்குரார்ப்பணம்

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபையில் பொதுமக்களுக்கான சேவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்கும் பொருட்டு டிஜிட்டல் வசதிகளுடன் அமைக்கப்பட்ட முகப்பு அலுவலகம் (Onestop Service) நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.



மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, கணக்காளர் கே.எம். றியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ. வட்டப்பொல, வேலைகள் அத்தியட்சகர் வி. உதயகுமரன், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம். நௌசாத், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.பாஸித், ஏனைய பிரிவுகளின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களான என். பரமேஸ்வர வர்மன், யூ.எம். இஸ்ஹாக், எம்.ஏ. அஹத், நிதி உதவியாளர் திருமதி எஸ். யோகராஜா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபையின் சேவைகளை பெற்றுக் கொள்ள வருகை தருகின்ற பொதுமக்கள் இந்த முகப்பு அலுவலகத்திலுள்ள கரும பீடங்களில் உரிய ஆவணங்களுடன் சோலை வரி மற்றும் சேவைக் கட்டணங்களை செலுத்திவிட்டு, இங்கு இருந்தவாறே தமக்கான சேவைகளை இலகுவாக நிறைவு செய்து கொண்டு செல்ல முடியுமென மாநகர ஆணையாளர் இதன்போது குறிப்பிட்டார்.

இதன்மூலம் கடந்த காலங்களில் சேவைகளை பெற்றுக் கொள்வதில் நிலவிய கால தாமதங்கள் மற்றும் தேவையற்ற அசௌகரியங்கள் முற்றாக தவிர்க்கப்படுவதுடன் தம்மால் செலுத்தப்படுகின்ற வரிகள் மற்றும் கட்டணத் தொகைகளுக்கு முழுமையான உத்தரவாதமளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக சமூகம்

(யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்)



நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டலின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினரால் பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் சிரமதானப் பணிகளினால் 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் எவரும் அடையாளப்படுத்தப்படவில்லையென நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் டொனால்ட் சுகந்தராஜ் ஜெபரெட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் தெல்லிப்பளைப் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக கலைப்பீட மாணவியொருவர் டெங்கு தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்திருந்தார். இந்நிலையில் பல்கலைக்கழகத்தின் சகல விடுதிகளிலும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், வடக்கு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் மற்றும் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் பல்கலைக்கழக சமூகத்தினரால் அதன் சுற்று வட்டாரங்களிலுள்ள வீடுகள் மற்றும் பொது இடங்களில் சிரமதானப் பணிகள் கடந்த செவ்வாயன்று மேற்கொள்ளப்பட்டது.

சிரமதானப் பணிகளில் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களால் நுளம்பு பெருகுவதற்கான பல இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டன.

இதன்போது சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையான உதவிகளையும், சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் பணிகளுக்கான ஆதரவையும் நல்லூர் பிரதேச சபையும், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் வழங்கின.

தொடர்ந்து வரும் நாட்களில் பல்கலைக்கழகத்தின் விடுதிகள் மற்றும் பிரதான வளாகத்தினுள் அமைந்துள்ள பீடங்களில் விசேட புகையூட்டல் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் டொனால்ட் சுகந்தராஜ் ஜெபரெட்ணம் மேலும் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்



வலிகிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பத்து விளையாட்டு கழகங்களைச் சேர்ந்த 150 கிரிக்கட் வீரர்களை ஏலத்தில் தெரிவு செய்யும் "யூ.சி.எல் மெகா ஒக்சன்" எனும் நிகழ்வு அண்மையில் ஊரெழு அனுஷ்கா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் திரு.இரா.ஜெயக்குமார் கலந்துகொண்டார்.

## 96 வயதான மூதாட்டி கிணற்றினுள் தவறி விழுந்து உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழில் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு முற்பட்ட 96 வயதான மூதாட்டியொருவர் கிணற்றினுள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். அராலி மேற்கு வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா (வயது 96) எனும் மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வீட்டிலுள்ள கிணற்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தண்ணீர் அள்ளுவதற்கு முற்பட்ட வேளை கிணற்றில் தவறி விழுந்துள்ளதாக மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதல்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்துக்கு அருகில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த வன்முறை கும்பலொன்று இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. பின்னர் வீதியில் நின்ற முச்சக்கர வண்டியொன்றினையும் அடித்து உடைத்து சேதமாக்கிய பின்னர் அவ்விடத்திலிருந்து தப்பி சென்றுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாணவர் கௌரவிப்பு விழா



கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த.உயர்தரம், சாதாரண தரம், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை புரிந்த அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து கௌரவமளிக்கப்பட்டனர். மாவட்டச் செயலகத்தின் வருடாந்த ஒன்றுக் கூடலிலேயே இம்மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து உயர்தர விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற கேதீஸ்வரன் கிசேரன் உட்பட சாதனை நிலைநாட்டிய மாணவர்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரால் கௌரவமளிக்கப்பட்டனர்.
(படங்கள்: முல்லைத்தீவு குறூப் நிருபர்)

இடைக்கட்டு கிராமத்தில்

# யானை தொல்லை நெற்பயிர்கள் அழிவு!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



இடைக்கட்டு கிராமத்தில் யானை தொல்லை அதிகரித்து வருவதால் நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகளால் நெற்செய்கைக்கு அழிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட இடைக்கட்டு குளத்தின் கீழ் விவசாயம் செய்துவரும் விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெற்பயிர் செய்கை காட்டுயானைகளினால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இடைக்கட்டு குளத்தின் கீழ் 60 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் அறுவடைக்கு 15 நாட்கள் இருக்கும் நிலையில் நெற்பயிர்களை காட்டு யானைகள் நாசம் செய்துவருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக வரும் காட்டுயானைகளால் தாங்கள் அழிவினை சந்தித்துள்ளதாகவும் காட்டுயானைகளை கட்டுப்படுத்த யானை வேலிகூட இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லையெனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். நேற்று இரவு ஆறுக்கு மேற்பட்ட காட்டுயானைகள் வந்து நெற்பயிர்களை நாசம் செய்துள்ளன.

# வவுனியா விமானப்படை தளத்தை படம் எடுத்த இளைஞன் கைது

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா விமானப்படை தளத்தை புகைப்படம் எடுத்ததாக சந்தேகத்தின் பேரில் இளைஞரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி விசேட விமானத்தில் வருகை தந்து வன்னி அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள விருந்தமையால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு வாகனத்தொடரணி சென்றுக் கொண்டிருந்த போது அதனை இளைஞரொருவர் புகைப்படம் எடுத்தமையை அவதானித்த விமானப்படை பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் இளைஞனை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இளைஞன் பூனாவ பகுதியைச் சேர்ந்த பைருஸ் பவாஹிர் என தெரியவருகின்றது. இவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வவுனியாவில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்: சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியாவில் தற்பொழுது எலிக்காய்ச்சல் அதிகளவில் பரவுவதனால் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இக்காய்ச்சலானது எலிகளிலிருந்து மனிதனுக்கு பரவும் ஒருவகை பக்ரீறியா நோயாகும்.

ஈரமான, சேறு நிறைந்த இடங்களில் வேலை செய்பவர்கள் அல்லது வயல்களில் வேலை செய்வோர் தங்கள் கால்களில் காயங்கள் அல்லது தோல் நோய்கள் இருப்பின் அவதானமாக இருத்தல் வேண்டும். தற்போது பலர் எலிக்காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, காய்ச்சல், தலைவலி, உடல்வலி என்பன ஏற்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவும்.

குறிப்பாக அண்மையில் வவுனியா, செட்டிகுளம், முகத்தான் குளத்தைச் சேர்ந்த பிரசங்கர் என்ற 22 வயதுடைய இளைஞன் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

# கடற்றொழிலுக்கு சென்றவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழப்பு

(யாழ். விசேட, நாகர்கோவில் விஷேட நிருபர்கள்)

யாழில் கடற்றொழிலுக்கு சென்றவர், திடீர் சுகவீனமுற்ற நிலையில் கரைக்கு அழைத்து வரப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த அன்ரனி ஜூட் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடற்றொழிலுக்காக மேலும் மூவருடன் கடலுக்கு சென்றிருந்த போது நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் திடீரென சுகவீனமுற்றுள்ளார். அதனையடுத்து ஏனையவர்கள் படகினை திருப்பி கரைக்கு கொண்டு வந்து அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். எனினும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# மலையகத்தில் கடும் மழை மரக்கறி உற்பத்தி பாதிப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)



மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மரக்கறி செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மலையக விவசாயிகள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக மரக்கறி மற்றும் விவசாய நிலம், உற்பத்தி பொருட்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சீரற்ற காலநிலை மலையகத்தில் தொடர்வதால் நுவரெலியா, கந்தப்பொல, ஹற்றன், நானுஓயா, மஸ்கெலியா மாத்திரமன்றி வெலிமடை, பொரகஸ் சில்மியாபுர, ஹப்புத்தளை, எல்ல, பண்டாரவளை,கொஸ்லந்தை போன்ற பகுதிகளிலுள்ள மரக்கறி செய்கைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு,கோவா, போஞ்சி, லீக்ஸ் போன்ற மரக்கறி மற்றும் இதர விவசாய விளைபொருட்கள் யாவும் கடும் மழையினால் அழுகி வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதுமாத்திரமின்றி விவசாய காணிகளில் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் விளை நிலங்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக மலையகத்தில் விளையும் மரக்கறி வகைகளின் விலையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

# குளவித் தாக்குதலினால் ஒருவர் பலி

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டல்கல தோட்டத்தில் 7 பேர் குளவிக் கொட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதில் 14 வயதுடைய சிறுவன் ஒருவனும் அடங்குவதாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். மாலை வேளையில் பட்டல்கல தோட்ட காரியாலய பகுதியில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போதே மரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து தாக்கியுள்ளது. இதில் காயமடைந்த வயோதிபப் பெண் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில்

# சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு; வீதிகள் தாழிறக்கம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகள் காரணமாக புதிதாக காபட் செய்யப்பட்ட வீதிகள் தாழிறங்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

நிலம் தோண்டப்படுவதால் இரத்தினபுரி மாவட்டத்தின் பல இடங்களில் வீதிகள் தாழிறங்கியுள்ளதாக சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு குற்றம்சாட்டுகிறது.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்திலேயே சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.கொடெல்லவத் இதுதொடர்பில் கருத்து தெரிவித்தார். இரத்தினபுரி மாவட்டத்தில் பல மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ள இவ்வீதிகளின் பல இடங்கள் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வினால் பாதிப்படைந்து வருகின்றன. பலாங்கொடை, கலவான, இரத்தினபுரி, பெல்மதுளை போன்ற பல இடங்களில் இந்நிலைமை பரவலாக காணப்படுகிறது. இவ்விடயத்தில் இரத்தினக்கல் அதிகாரசபை காட்டும் ஆர்வம் போதுமானதாக தெரியவில்லை. எனவே இரத்தினக்கல் அதிகாரசபை வீதிகளின் இரு பகுதிகளிலும் இரத்தினக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## மலைச்சாரல்

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட

# ஹொப்டன் தோட்டத்துக்கு ஜனாதிபதியின் ஆலோசகர் வடிவேல் சுரேஷ் விஜயம்



லுணுகலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஹொப்டன் தொழிற்சாலை பிரிவைச் சேர்ந்த 110 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்போது ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை நேரில் சென்று பார்வையிட்ட ஜனாதிபதியின் ஆலோசகரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை வேறு இடங்களில் அமைத்துக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடியதோடு அவர்களுக்கு நிவாரண பொருட்களையும் வழங்கி வைத்தார்.

# குறைப்பிரசவ தினத்தில் சிசு பராமரிப்பில் முன்னோடியாக திகழும் நைன்வெல்ஸ்




சிசு, குழந்தை மற்றும் குடும்ப சுகாதாரப் பராமரிப்பு என்று வரும் போது நைன்வெல்ஸ் வைத்திய சாலை இத்துறையில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்களுக்கும் இடமின்றி முன்னோடியாகத் திகழ்ந்து வருவதுடன், குறிப்பிட்ட காலத்திற்கு முன்பதாகவே பிரசவமாகின்ற சிசுக்கள் தொடர்பான மருத்துவப் பராமரிப்பில் வெற்றிகரமான செயல்பாடுகளை தொடர்ச்சியாக நிரூபித்து வந்துள்ளது. குறிப்பிட்ட காலத்திற்கு முன்பதாகவே பிரசவமாகின்ற 200 க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஆண்டுதோறும் பராமரித்து, இலங்கையில் சிசுப் பராமரிப்பின் பரிமாணத்தை முற்றிலும் மாற்றியமைக்கும் தனது பயணத்தை பிரதிபலிக்கும் வகையில், உலக குறைப்பிரசவ தினத்தை இவ்வைத்தியசாலை கொண்டாடியுள்ளது.

குடும்பத்தை மையமாகக் கொண்ட சிசுப் பராமரிப்பு, விஞ்ஞானபூர்வமான மற்றும் ஆதாரம் சார்ந்த அணுகுமுறை, அனைவரதும் கண்ணியத்திற்கு மதிப்பளித்தல், கௌரவம் குன்றாத சூழலைத் தோற்றுவித்தல், குடும்பத்தினருடன் அனைத்து தகவல் விபரங்களையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றின் மீது நைன்வெல்ஸ் வைத்திய சாலை காண்பிக்கும் அர்ப்பணிப்பே அதன் வெற்றியாகும்.

# Hindenburg சர்ச்சை; உண்மை வென்றதாக கௌதம் அதானி தெரிவிப்பு



அதானி குழுமத்தின் தலைவரான தொழிலதிபர் கௌதம் அதானி, தனது குழுமத்தின் மீது அமெரிக்கக் வர்த்தக நிறுவனமொன்று சுமத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பில் உண்மை வென்றுள்ளதாகவும், இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் தனது குழுமம் தொடர்ச்சியாக பங்களிக்கும் என்றும் கூறியுள்ளார். இது தொடர்பில் இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பைத் தொடர்ந்து அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அதானி குழுமத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து SIT அல்லது CBI விசாரணைக்கு உத்தரவிட எந்தவிதமான அடிப்படையும் இல்லை என்றும், மூலதனச் சந்தை ஒழுங்குபடுத்துனரான SEBI, மூன்று மாதங்களுக்குள் அதன் விசாரணையை நிறைவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்திருந்தது.

இந்திய பிரதம நீதியரசர் D.Y. சந்திரசூட் தலைமையிலான மூவரடங்கிய உச்ச நீதிமன்ற மூன்று நீதிபதிகள் குழாம் அமர்விலேயே இவ்வுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நிலுவையில் உள்ள விசாரணையை மூன்று மாதங்களுக்குள் முடிக்குமாறு இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை சபையிடம் (SEBI) நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. இதன் மூலம், applestoairport குழுமத்திற்கு எதிராக ஒரு வருட காலமாக இடம்பெற்ற Hindenburg ஆராய்ச்சியின் கடுமையான அறிக்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# இறப்பர் விவசாயிகளின் பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் சியெட்



சியெட் களனி ஹோல்டிங்ஸ், அதன் விநியோகச் சங்கிலியின் முக்கிய அங்கமான இறப்பர் விவசாயிகளின் குழந்தைகளின் கல்வியை ஆதரிப்பதற்காக ஒரு புதிய சமூகத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

10,000 விவசாயக் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 100 சதவீத இயற்கை இறப்பர் தேவைகளைக் கொண்ட இலங்கையின் நியூமேடிக் டயர் தேவைகளில் பாதியை உற்பத்தி செய்யும் சியெட், இறப்பர் வளரும் பகுதிகளில் பாடசாலை புத்தகப் பைகள், எழுதுபொருட்கள் மற்றும் கல்வித் தேவைகளுக்கான பிற பொருட்களையும் விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.

மத்துகம கல்வி வலயத்தை மையமாகக் கொண்ட இந்த திட்டத்தின் முதல் கட்டமான நல்ல குடியுரிமை முன்முயற்சிகளின் 'சியட் கேர்ஸ்' போர்ட்ஃபோலியோவின் ஒரு பகுதியானது, சியெட் டயர்களை அதிகம் பயன்படுத்தும் இலங்கை இராணுவத்தின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் பல்லேகொடவில் அமைந்துள்ள பல்லேகொட தமிழ் பாடசாலை மற்றும் இட்டப்பனவிலுள்ள மிரிஸ்வத்த தமிழ் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளும் முதலாவதாக பயனடைந்துள்ளன.



# அத்தனகல்ல ரஜ மகா விகாரையை ஒளிரச் செய்த சுதேசி கொஹொம்ப

மூலிகைகள் கொண்ட தனிநபர் பராமரிப்புப் பொருட்கள் உற்பத்தியாளரும், சந்தையில் முன்னணியில் உள்ள சுதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் பி.எல்.சி. ஆனது, அதன் சமூக ஆதரவு முயற்சிகளில் ஒன்றின் மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தனகல்ல ரஜ மகா விகாரையின், 'ஆலோக பூஜாவ' ஒளியூட்டும் நிகழ்வுக்கு அண்மையில் அனுசரணை வழங்கியிருந்தது. 'சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா சத்காராய' ஆனது, சுதேசி நிறுவனத்தின் தலைவி திருமதி அமாரி விஜேவர்தனவின் எண்ணக்கருவாகும்.

கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள அத்தனகல்ல ரஜ மகா விகாரை, போதி சத்வ ஸ்ரீ சங்கபோதி, ஒரு வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக மாபெரும் யாகத்தை செய்த இடமாக வரலாற்று ரீதியாக அடையாளங் காணப்படுகின்றது. ஸ்ரீ சங்கபோதி மன்னன் (கி.பி. 247249) எனும் பெயரால் அறியப்பட்ட அவர், இலங்கை வரலாற்றில் மிகவும் பக்தியுள்ள பௌத்த அரசராக, இலங்கையின் வரலாற்றிலும் ஏனைய பண்டைய இலக்கியங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவராவார். ஸ்ரீ சங்கபோதி மன்னருக்குப் பின்னர், மன்னரான அவரது சகோதரரான, கோட்டாபய (கி.பி. 249262) தனது சகோதரரான போதிசத்வ ஸ்ரீ சங்கபோதி ஒரு வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக பெரிய யாகம் செய்த இடத்தில் ஒரு தூபியைக் கட்டினார்.

இதிலுள்ள வட்டதாகே உள்ளிட்ட இந்த விகாரையானது ஒரு முக்கியமான தொல்பொருள் தலமாகும். இது இலங்கையில் உள்ள ஒரே வட்டவடிவான பாரம்பரிய விகாரையாகும். இது தற்போது புனரமைக்கப்பட்ட போதிலும் அதன் தொன்மை இன்னும் மாறாமல் உள்ளது.




# புத்தாக்கமான விவசாய மேம்பாட்டு செயற்திட்டமொன்றை முன்னெடுக்கும் SDF

நிலைபேணத்தகு விவசாய நடைமுறைகளை மேம்படுத்தி, விவசாய சமூகங்களை முன்னேற்றும் ஒரு தைரியமான நடவடிக்கையாக அமைந்துள்ள "Araliya Paddy Seeds" என்ற தனது விநியோக செயற்திட்டத்தை சர்வோதய டெவலெப்மென்ட் ஃபினான்ஸ் பிஎல்சி ஆரம்பித்துள்ளது. இலக்கு வைக்கப்பட்ட பிரதேசங்களில் பொருளாதார மேம்பாட்டுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் அதேசமயம், உணவுற்பத்தியில் தன்னிறைவு காணும் தேசிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் முயற்சியாக, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கச்செய்வதே இந்த முயற்சியின் பிரதான நோக்கமாகும்.

பிரதானமாக அம்பாறை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் கவனம் செலுத்திய வாறு, இப்பிராந்தியங்களில் அல்லும், பகலும் உழைக்கும் விவசாயிகளுக்கு சிறந்த விளைச்சலை உறுதி செய்து, விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதே நிறுவனத்தின் இலக்காக உள்ளது. உயர் தர விதை நெல்லை விநியோகிப்பதனூடாக, விவசாயிகளுக்கு வலுவூட்டி, அவர்களுடைய வாழ்வாதாரங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விதை நெல் விநியோகத்திற்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் சேதன விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்ட நடைமுறைகளையும் SDF மும்முரமாக ஊக்குவித்து வருகின்றது. நிதியியல் உதவித் திட்டங்கள் அடங்கலாக, நிறுவனத்தின் விரிவான அணுகுமுறையானது நிலைபேணத்தகு மற்றும் சூழல்நேய விவசாய முறைமைகளுக்கு மாறிக்கொள்ள விவசாயிகளை ஊக்குவிக்கின்றது.

# எதிர்கால சிறப்புடன் தனது 10ஆவது ஆண்டில் நுழைந்துள்ள NCHS



இலங்கையின் உயர்கல்வித் துறையில் புதிய மைல்கல்லைப் பதித்த நவலோக்க உயர்கல்வி நிறுவனம், கல்விச் சேவைகளுக்கான தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் தனது பத்தாவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கிறது. 2014 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நவலோக்க உயர்கல்வி நிறுவனம், அவுஸ்திரேலியாவின் முன்னணி பல்கலைக் கழகங்களில் ஒன்றான ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து, இலங்கையில் மாணவர்களின் நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் தெளிவான எதிர்காலத்திற்காக உயர் கல்வியை வழங்குவதற்கான பாரிய பணியில் ஈடுபட்டுள்ளது.

நவலோக்க உயர்கல்வி நிறுவகத்தின் கல்விப் பணி மற்றும் புத்தாக்கம், ஸ்வின்பர்னுடனான தொடர்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், கல்வித் துறையில் உள்ள பாரிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இலங்கையின் உயர்கல்வித் துறையை தரம் வாய்ந்த புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்வதில் ஈடு இணையற்ற பங்களிப்பைச் செய்துள்ளது. அவுஸ்திரேலியாவின் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், நவலோக்க உயர்கல்வி நிறுவனத்தின் கல்விப் பணி மற்றும் புத்தாக்கமும் ஆஸ்திரேலிய உயர்கல்வி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரு தசாப்த கால அனுபவத்துடன் நவலோக்க உயர்கல்வி நிறுவனம் எதிர்காலத்தில் இலங்கையின் உயர்கல்வியில் உந்து சக்தியாக மாற திட்டமிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் எதிர்காலக் கல்வியின் துணைவேந்தர் ப்ரோன்டே நெய்லேண்ட், "ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்திற்கும் நவலோக்க உயர்கல்வி நிறுவனத்திற்கும் இடையிலான நீண்ட கால உறவு இரு நிறுவனங்களுக்கும் மிகவும் முக்கியமானது மற்றும் பயனுள்ளது என்று நான் நம்புகிறேன். மேலும், இலங்கையை மையமாகக் கொண்ட கல்விச் சேவைகளை வழங்கி 2024ஆம் ஆண்டுக்குள் பத்து வருடங்களை நிறைவுசெய்துள்ளோம் என்பதால், எதிர்காலத்தில் அதிக தொடர்புகளைப் பேணுவதே எமது நோக்கமாகும்." என தெரிவித்தார்.

# பசுமை வலுசக்தி திட்டத்திற்காக கூட்டுச் சேர்ந்த SLSEA, SIA, Huawei




இலங்கையில் நிலைபேறான வலுசக்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில், இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபை (SLSEA) மற்றும் சூரிய சக்தி கைத்தொழில்கள் சங்கம் (SIA) ஆகியவற்றுடன் இணைந்து 'நிலைபேறான வலுசக்திக்கான எதிர்காலத்தின் சாத்தியத்திற்கான பாதையை திறத்தல்' எனும் தலைப்பில் சமீபத்தில் ஒரு முக்கிய மாநாட்டை Huawei ஏற்பாடு செய்திருந்தது.

300 இற்கும் மேற்பட்ட முக்கிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறை அழைப்பாளர்களுடன், இத்துறையின் பரிணாமத்தை உயர்த்தும் வகையிலான முக்கியமான தலைப்புகளில் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கும், ஆழ்ந்த நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதற்குமாக அமைந்த இந்த நிகழ்வானது, தொழில் வல்லுநர்களுக்கு ஒரு பல்வகைத் தளமாக அமைந்திருந்தது.

# 2023ஆம் ஆண்டை 'Year on TikTok' அறிக்கையுடன் கொண்டாடும் TikTok





TikTok அதன் ஆண்டறிக்கையான Year on TikTok 2023ஐ வெளியிட்டது, இது அதன் உலகளாவிய சமூகத்தை கொண்டாடும் வருடாந்த ஆண்டு இறுதி அறிக்கையாகும், இது 2023 ஆம் ஆண்டை இலங்கையிலும் உலகின் பிற பகுதிகளிலும் உருவாக்கிய மிகவும் மறக்கமுடியாத சம்பவங்கள், படைப்பாளிகள் மற்றும் தருணங்கள் ஆகியவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

இந்த ஆண்டு முழுவதும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்ட TikTok இன் உலகளாவிய சமூகம், கலாச்சாரம் மற்றும் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தளத்தில் தொடர்ந்து ஒன்றிணைந்தது.

சுவையான சமையல் குறிப்புகள் முதல் வேடிக்கையான குறும்புகள், Throwback tracks மற்றும் வளர்ந்து வரும் சிறு வணிகங்கள் வரை, TikTok சமூகம் 2023 முழுவதும் நம்பகத் தன்மையை உருவாக்கி, இணைத்து, கொண்டாடியது.

# இன்று ஆரம்பமாகும் மாபெரும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி FACETS



இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் (NGJA) இணைந்து ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS கண்காட்சியின் 30ஆவது பதிப்பு தொடர்பான பிரம்மாண்டமான கொண்டாட்டத்தை பெருமையுடன் அறிவித்துள்ளது.

ஜனவரி 06 முதல் 08 ஆம் திகதி வரை பெருமைக்குரிய கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள இந்த நிகழ்வானது, இலங்கையின் இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்களின் விசேடத்துவத்தை உலக அரங்கிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்ற 30 வருட நிறைவைக் குறிக்கிறது.

இந்நிகழ்வு தொடர்பில் ஆர்வமாக செயற்பட்டு வரும் FACETS Sri Lanka கண்காட்சியின் தலைவர் அல்தாஃப் இக்பால் இது குறித்து கருத்து வெளியிடுகையில், "இந்த நிகழ்ச்சி இலங்கைக்கானது என்பதை FACETS எப்போதும் வலியுறுத்துகிறது. இது எமது இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்களின் செழுமை மிக்க பாரம்பரியத்தை உலகிற்கு வெளிப்படுத்துகிறது. உலகம் முழுவதிலுமிருந்து கொள்வனவாளர்களை நாம் இங்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். அத்துடன் எதிர்வரும் ஆண்டுகளில் FACETS உலகெங்கிலும் இருந்தும் பங்கேற்பாளர்களை அதிகரிப்பதன் மூலம், நேர்த்தியான இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை அவர்களிடையே பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறது." என்றார்.

FACETS 2024 கண்காட்சியானது, இலங்கையின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண பாரம்பரியத்தின் சாரத்தை காண்பிக்கும் பல கூடங்களைக் கொண்ட ஒரு கண்கவர் கண்காட்சியாக அமையும் என்பதை உறுதியளிக்கிறது. இந்த மாபெரும் நிகழ்வின் ஒருங்கிணைந்த பகுதிகளாக Premier Gem Pavilion, Premier Jewellery Pavilion, Sustainable Pavilion, Sapphire Masterpiece Pavilion, Gem Lab Pavilion, NGJA SME Pavilion, SLGJA Gem and Jewellery Pavilion ஆகியன அமைந்திருக்கும்.

# நிலைபேறு தன்மைக்கான அர்ப்பணிப்புடன் வியாபார குறியீட்டை வெளியிடும் கொமர்ஷல் வங்கி

நிலைபெறுதகு தன்மைக்கான அதன் உண்மையான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் கொமர்ஷல் வங்கி 2024 ஆம் ஆண்டைத் தொடங்கியுள்ளது.

நீல நிறத்தில் அங்கீகரிக்கப்படும் கொமர்ஷல் வங்கியின் வியாபாரக்குறியீடு இனி பச்சை நிற அம்சத்தையும் உள்ளடங்கியிருக்கும், இது நிலைபெறுதகுதன்மை, பன்முகத்தன்மை, உள்ளடக்கம், நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, சமூக சமத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் சூழல் நட்பு வங்கித் தீர்வுகள் ஆகியவற்றுக்கான வங்கியின் பன்முக அர்ப்பணிப்பை பிரதிநிதித்துவப்படுத்தும்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு சனத் மனதுங்க கருத்துத் தெரிவிக்கையில், 'நிலைபெறுதகு தன்மைக்கான எங்களின் அர்ப்பணிப்பு என்பது வெறும் வார்த்தையல்ல, அது எங்கள் டிஎன்ஏவில் பதிந்து, எங்களது முடிவுகள், செயல்கள் மற்றும் நாங்கள் வழங்கும் சேவைகளை பாதிக்கிறது." 'நாங்கள் செய்யும் அனைத்திலும் ஒரு நிலைபெறுதகு வங்கியாக இருக்கிறோம், மேலும் அதன் நிறுவன அடையாளத்தில் அந்த அர்ப்பணிப்பைப் பிரகடனப்படுத்தும் இலங்கையின் முதல் அமைப்பாக நாங்கள் இருக்கிறோம், மேலும் எங்கள் பங்குதாரர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், மற்றும் வணிகப் பங்காளிகள் முதல் பார்வையில் அதைக் காண முடியும்."

'புதிய வியாபாரக்குறியீடு எங்கள் செயல்பாடுகளின் அனைத்துத் துறைகளிலும் முழுமையான நிலைபெறுதகு தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் நாங்கள் வணிகம் செய்யும் விதத்தில் எங்கள் நடைமுறை அர்ப்பணிப்பு காகிதமில்லாத பரிவர்த்தனைகள், பொறுப்பான இணக்க நடைமுறைகள் மற்றும் ஆற்றல் திறனுள்ள செயல்பாடுகள் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது" என திரு மனதுங்க மேலும் கூறினார்.



## முதல் ஒருநாள் போட்டி

# புதிய அணித்தலைவருடன் சிம்பாப்வேயை இன்று எதிர்கொள்கிறது இலங்கை அணி

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று (06) கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் பகலிரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது.

உலகக் கிண்ணத்தில் சந்தித்த தோல்வியை அடுத்து புதிய தேர்வுக் குழுவினால் புதிய அணித் தலைவரின் கீழ் இலங்கை அணி ஆடும் முதல் போட்டியாக இது அமையவுள்ளது. எனினும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகி இருப்பதாக சந்தேகிக்கப்படும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க இந்த ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டிருப்பதோடு அவருக்கு பதில் ஷெவோன் டனியல் அணியில் இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய போட்டியில் 28 மாதங்களின் பின் அகில தனஞ்சயவுக்கு அணியில் இடம் கிடைக்க வாய்ப்பு இருப்பதோடு, சகல துறையிலும் சோபித்து வரும் ஜனித் லியனகேவும் அழைக்கப்பட வாய்ப்பு உள்ளது. அதேபோன்று புதிய ஒருநாள்



அணித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் குசல் மெண்டிஸ் மற்றும் உப தலைவர் சரித் அசலங்கவின் வழி நடத்தலில் இலங்கை அணி எதிர்கொள்ளும் போட்டி என்பதால் இன்றைய ஆட்டம் முக்கியமானதாக உள்ளது. இதில் துடுப்பாட்ட வரிசையில் இன்றைய ஆட்டத்தில் அவிஷ்க பெர்னாண்டோ களமிறங்க வாய்ப்பு இருப்பதோடு மத்திய வரிசையில் சதீர சமரவிக்ரம, சரித் அசலங்க, முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க செயற்பட வாய்ப்பு உள்ளது.

பந்துவீச்சில் டில்ஷான் மதுஷங்க, துஷ்மந்த சமீர, மஹீஷ் தீக்ஷன மற்றும் அகில தனஞ்சய பலம் சேர்க்க வாய்ப்பு உள்ளது.

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகள் இலங்கையில் இதுவரை 16 தடவைகள் சந்தித்திருப்பதோடு அதில் 12 முறை இலங்கையும் 4 தடவைகள் சிம்பாப்வே அணியும் வெற்றியிட்டியுள்ளன. கடைசியாக 2022 ஜனவரியில் இரு அணிகளும் சந்தித்தபோது 2–1 என ஒருநாள் தொடரை இலங்கை அணியால் வெல்ல முடிந்தது. எவ்வாறாயினும் ஒருநாள் தரவரிசையில் 88 புள்ளிகளுடன் தற்போது 7 ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை அணி இந்த ஒருநாள் தொடரை தோற்றால் 8 ஆவது இடத்திற்கு தள்ளப்படும். தரவரிசையில் 87 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் இருக்கும் பங்களாதேஷ் 7 ஆவது இடத்திற்கு முன்னேறிவிடும்.

பல மாற்றங்களுடன் களமிறங்கும் இலங்கை அணிக்கு சிம்பாப்வேயுடனான இந்த ஒருநாள் தொடர் எதிர்கால செயற்பாடுகளுக்கு தீர்க்கமானதாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய போட்டியில் களமிறங்க வாய்ப்பு உள்ள இலங்கை அணி: குசல் மெண்டிஸ் (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), சதீர சமரவிக்ரம, அவிஷ்க பெர்னாண்டோ, தசுன் ஷானக்க, மஹீஷ் தீக்ஷன, அகில தனஞ்சய, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, துனித் வெள்ளாலகே அல்லது ஜனித் லியனகே.

# டி20 உலகக் கிண்ண குழுக்கள் வெளியீடு

## இலங்கை அணி ‘டி’ குழுவில்

மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணத் தொடருக்கான குழுக்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமான தி டெலிகிராம் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.



இந்த ஆண்டு நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணத்தில் ஒட்டுமொத்தமாக 20 அணிகள் பங்கேற்கவுள்ளதுடன், முதல் சுற்றில் 20 அணிகள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்டுள்ள குழுக்களின் அடிப்படையில் இலங்கை அணி குழு டி இல் இடம்பெற்றுள்ளது. இலங்கை, தென்னாபிரிக்கா, நெதர்லாந்து, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய அணிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளன.

ஒரு குழவில் ஐந்து அணிகள் உள்வாங்கப்படும் என்பதுடன், அடுத்ததாக சுப்பர் 8 சுற்று நடைபெறும். குழுநிலை போட்டிகளில் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 8 சுற்றில் மோதும்.

கடந்த காலங்களில் குழுநிலையில் முதல் இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த குழுவில் இரண்டாவது இடத்தை பிடிக்கும் அணியை எதிர்கொள்ளும் வகையில் போட்டி அட்டவணைகள் அமைக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் இம்முறை குழுநிலை இடங்களை தவிர்த்து டி20 தரவரிசையின்படி சுப்பர் 8 சுற்றுக்கான அணிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக இங்கிலாந்து அணி குழு பி இல் முதல் இரு இடங்களில் ஒரு இடத்தை பிடித்தால், பி1 அணியாக கருதப்பட்டு, சுபர் 8 சுற்றில் மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளை எதிர்கொள்ளும்.

இதேவேளை சுப்பர் 8 அட்டவணையின் படி அவுஸ்திரேலிய அணிக்கு பதிலாக ஸ்கொட்லாந்து அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும் பட்சத்தில் அவுஸ்திரேலியாவின் பி2 இடத்தை பிடித்து சுப்பர் 8 சுற்றில் போட்டியிடும் வகையில் அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# போருக்கு பின் காசாவுக்கான இஸ்ரேலின் திட்டம் வெளியீடு: தொடர்ந்தும் தாக்குதல்

## பலஸ்தீனர்களை ஏற்க சாட், ருவாண்டாவுடன் பேச்சு

போருக்குப் பின்னராக காசா நிர்வாகம் தொடர்பில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு பூர்வாங்கத் திட்டம் ஒன்றை முதல் முறை வெளியிட்டுள்ளது. போர் நடவடிக்கை நிறைவடைந்த பின் அந்தப் பகுதியில் இஸ்ரேலோ அல்லது ஹமாஸோ ஆட்சி புரியாது என்று அந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேல் பயணித்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு இந்தத் திட்ட வெளியிடப்பட்டது. காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்த பின் பிளிங்கன் நான்காவது முறையாகவே மத்திய கிழக்கு விரைந்துள்ளார்.

காசாவில் இஸ்ரேல் தொடர்ந்தும் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக தீவிர தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழுத்தம் அதிகரித்திருக்கும் சூழலில் போருக்கு பின்னரான காசாவின் எதிர்காலம் குறித்து கேள்விகளும் பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றன.

காசாவில் ஆயிரக்கணக்காக மக்கள் வெளியேற்றப்பட்டு பஞ்சம் மற்றும் நோய் பரவல்களுக்கு முகம்கொடுத்து வருவதோடு மானிதாபிமான நெருக்கடி ஒன்று பற்றி ஐ.நா எச்சரித்துள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் மூலம் வெளியிடப்பட்ட போருக்குப் பின்னரான திட்டம் இஸ்ரேலின் போர் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முன் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது. அதில் “காசாவில் ஹமாஸ் ஆட்சி புரியாது, (மற்றும்) காசா பொது மக்களை இஸ்ரேல் ஆளாது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

“காசா குடிமக்கள் பலஸ்தீனர்களாவர், அதனால் விரோத செயற்பாடுகள் அல்லது இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் இருக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் பலஸ்தீன கட்டமைப்பு ஒன்றே அங்கு பொறுப்பாக இருக்கும்” என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் திட்டத்தின்படி காசாவின் ஒட்டுமொத்த பாதுகாப்பு இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்பதோடு இஸ்ரேலிய குண்டு மழையால் பெரும் அழிவை சந்தித்திருக்கும் அந்தப் பகுதியின் மீள் கட்டுமானத்தில் பன்னாட்டு தரப்பு பொறுப்பேற்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் திட்டம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து போர் புரிந்து வருவதோடு ஒக்டோபர் 7 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட பணயக்கைதிகள் பாதுகாப்பாக திரும்புவது மற்றும் ஹமாஸ் இராணுவ மற்றும் ஆட்சி திறன் ஒழிக்கப்படும் வரை போர் நீடிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

உள்ளூர் பலஸ்தீன கட்டமைப்புகள் காசாவில் ஆட்சியை ஆரம்பிக்கும் போது புதிய கட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று அந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் சுமார் 1,140 பேர் கொல்லப்பட்டதை அடுத்தே இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் வெடித்தது. இதன்போது கடத்தப்பட்ட சுமார் 250 பணயக்கைதிகளில் தொடர்ந்து 132 பணயக்கைதிகள் ஹமாஸ் பிடியில் இருப்பதாக நம்பப்படுகிறது.

### 3 மாதங்கள் தொடரும் தாக்குதல்

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் காசாவெங்கும் நூறுக்கும் அதிகமான இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் நேற்று (05) குறிப்பிட்டது. ஹமாஸ் இராணுவத் தளங்கள் மற்றும் ஆயுதக் களஞ்சியங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியபோதும் பெரும்பாலான குடியிருப்பு கட்டடங்கள் தொடர்ச்சியாக இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன.

கான் யூனிஸில் நேற்று காலை வரை இடம்பெற்ற தாக்குதல்களில் 32 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு ரபாவில் மேலும் ஐவர் பலியாகி இருப்பதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய காசாவில் அல் சவைதா நகரில் உள்ள குடியிருப்பு வீடுகளை இலக்கு வைத்து இஸ்ரேல் நேற்று முன்தினம் இரவு வான் தாக்குதல்களை நடத்திய நிலையில் அவசர மற்றும் மீட்புக் குழுக்கள் நேற்று அங்கிருந்து இரு பலஸ்தீனர்களின் சடலங்களை மீட்டதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்து நிறுவனமான வபா கூறியது.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் அல் மாவாசி பகுதியை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களை அடுத்து நாசர் மருத்துவ வளாகத்திற்கு மூன்று சடலங்கள் வந்திருப்பதோடு காயமடைந்த ஐவர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய பீரங்கிகள் கிழக்கு பகுதியின் அல் புரைஜ் அகதி முகாம் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்திய அதே நேரம் மத்திய காசாவில் உள்ள மகாசி அகதி முகாமில் இருந்து காயமடைந்த பலரையும் அம்புலன்ஸ் மற்றும் மீட்புக் குழுக்கள் மீட்டுள்ளன.

மத்திய காசாவில் டெயிர் அல் பலா மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக பீரங்கி மற்றும் வான் தாக்குதல்களை நடத்திய அதே நேரம் அந்த நகரின் கடற்கரை பகுதி மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக வபா கூறியது.

இதில் இஸ்ரேலால் பாதுகாப்பான இடம் என்று அறிவிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா மீது நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் ஒட்டு மொத்த குடும்பமே கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டதாக அது கூறியது.

முன்னதாக கடந்த புதன் மற்றும்



வியாழக்கிழமைக்கு இடைப்பட்ட 24 மணி நேரத்தில் குறைந்தது 125 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 318 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு கூறியது.

காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதலுக்கு மூன்று மாதங்கள் எட்டும் நிலையில் உயிரிழப்பு 22,430 ஆக அதிகரித்துள்ளது. இதில் 9,730 சிறுவர்கள் மற்றும் 6,830 பெண்கள் அடங்குகின்றனர். தவிர 7,000க்கும் அதிகமானவர்கள் காணாமல்போயிருப்பதோடு 57,600க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சு கூறியது.

மக்களின் வெளியேற்றம் தணியாது நீடித்து வரும் நிலையில் காசாவின் தெற்கு எல்லை நகரான ரபாவை நோக்கி அளவுக்கு அதிகமான மக்களை ஏற்றிய வாகனங்கள் மற்றும் உடைமைகளை சுமந்த தள்ளு வண்டிகளுடன் மக்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருப்பதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

“நாம் ஜபலியா முகாமில் இருந்து மானுக்கு (கான் யூனிஸ்) தப்பிச் சென்றோம், இப்போது நாம் மானில் இருந்து ரபாவுக்கு தப்பி வந்துள்ளோம்” என்று தனது பெயரை குறிப்பிட மறுத்த பெண் ஒருவர் கூறினார். “அவர்கள் எம் மீது சூடு நடத்துகிறார்கள். தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு எதுவும் இல்லை” என்றும் அவர் கூறினார்.

பலஸ்தீனர்களை காசாவில் இருந்து வெளியேறும்படி கூறிய இஸ்ரேலின் இரு அமைச்சர்களின் கருத்து வேதனை அளிப்பதாக ஐ.நா மனிதாபிமானத் தலைவர் வோல்கர் டுர்க் தெரிவித்துள்ளார். போருக்குப் பின்னர் இஸ்ரேலிய குடியேறிகள் காசாவுக்கு திரும்ப வேண்டும் என்று இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் கிவர் கூறியிருந்தார். இதே போன்ற ஒரு கருத்தை தீவிர வலதுசாரி நிதி அமைச்சர் பெசாலல் ஸ்மோட்ரிச் கூறியிருந்தார்.

எனினும் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டிருப்பும் போருக்குப் பின்னரான திட்டத்தில், காசாவுக்குள் செயற்பட இஸ்ரேலுக்கு உரிமை இருப்பதாகக் கூறும் அதேநேரம் காசாவில் போரின் இலக்குகள் அடைந்த பின்னர் அங்கு எந்த இஸ்ரேலிய பொதுமகனும் நிலைகொள்ள முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் காசாவில் உள்ள பலஸ்தீனர்களை ஏற்கும்படி ருவாண்டா மற்றும் சாட் நாடுகளுடன் இஸ்ரேலிய அதிகாரிகள் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக இஸ்ரேலிய தினசரி பத்திரிகையான ‘சிமான் யிஸ்ராயேல்’ நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. பல நாடுகளும் இந்தக் கோரிக்கையை நிராகரித்த நிலையில் இது தொடர்பில் இந்த இரு நாடுகளும் அடிப்படை உடன்பாடு ஒன்றுக்கு வந்திருப்பதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தப் பத்திரிகை கடந்த புதனன்று வெளியிட்ட செய்தியில், கொங்கோ நாடு ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களை ஏற்க முன்வந்ததாக கூறியபோதும் அது கொங்கோ ஜயநாயக குடியரசா அல்லது கொங்கோ குடியரசா என்பதை உறுதி செய்யவில்லை.

இஸ்ரேலிய உளவுச் சேவையான மொசாட் மற்றும் வெளிவிவகார அமைச்சு இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜப்பான் பூகம்பம்: 250 பேரை தேடி மீட்புப் பணிகள் தீவிரம்

ஜப்பானில் புத்தாண்டு தினத்தன்று (01) ஏற்பட்ட பூகம்பத்தில் காணாமல் போன சுமார் 250 பேரைத் தேடி மீட்புப் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

காணாமல் போனவர்கள் சுமார் 72 மணி நேரம் உயிருடன் இருக்க வாய்ப்புள்ளது. ஆனால் தற்போது அந்த நேரமும் கடந்துவிட்டதால் அவர்களது நிலைமை குறித்துப் பெரும் கவலை எழுந்துள்ளது.

ரிச்டரில் 7 புள்ளி 6ஆகப் பதிவான அந்த பூகம்பத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 92ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்களின் எண்ணிக்கை ஒரு மடங்கு அதிகரிக்கப்பட்டு 4,600ஆக உயர்ந்துள்ளது.

சுசூ, வஜிமா ஆகிய நகரங்களில் வீடுகளின் இடிபாடுகளில் பலர்



சிக்கியிருப்பதாக நம்பப்படுகிறது. அந்தப் பலகை வீடுகள் பூகம்பத்தின் அதிர்வுகளைத் தாங்கக்கூடிய அளவுக்குக் கட்டப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் மின்சாரமும் தண்ணீருமின்றித் தவிக்கின்றனர்.

நிலச்சரிவுகள் ஏற்பட்டு வீதிகள் சேதமடைந்ததால் நூற்றுக்கணக்கான மக்களுக்கு உதவிகளைக் கொண்டுசேர்ப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# தென் கொரிய தீவுகள் மீது வடக்கு பீரங்கித் தாக்குதல்

தென் கொரியாவின் இரு தீவுகளுக்கு அருகில் வட கொரியா நேற்று 200க்கும் அதிகமான பீரங்கி குண்டுகளை வீசியுள்ளது. இது அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் இதற்கு பதிலடி வழங்கப்படும் என்றும் தென் கொரிய பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

இரு நாட்டுக்கும் இடையிலான பதற்றத்தை அதிகரித்திருக்கும் இந்த சம்பவத்தை அடுத்து குறித்த இரு தீவுகளின் குடிமக்களை வெளியேறும்படி தென் கொரியா உத்தரவிட்டுள்ளது. இதில் ஒரு தீவு மீது வட கொரியா 2010 ஆம் ஆண்டிலும் ஷெல் குண்டுகளை வீசி இருந்தது. அப்போது நால்வர் கொல்லப்பட்டனர்.

தென் கொரியா மற்றும் அதன் கூட்டாளியான அமெரிக்காவுக்கு எதிரான போருக்குத் தயாராகி இருப்



பதாக வட கொரியத் தலைவர் கிம் ஜொான் உன் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வந்த நிலையிலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வட கொரியாவின் தாக்குதலால் மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று தென் கொரியா தெரிவித்துள்ளது. இருப்பினும் வட கொரியாவின் தாக்குதல்கள் தொடர்ந்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் தென் கொரிய அரசு எச்சரித்துள்ளது.

# ரஷ்யாவுடன் நிலைத்த உறவு: உறுதி செய்தார் ஜெய்சங்கர்

உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்ற தாழ்வுகள் காணப்பட்டாலும் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நட்புறவு நிலையானதாக உள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், மொஸ்கோவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நட்புறவு பல வழிகளிலும் விதிவிலக்கானது என்றும் இந்த உறவில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்றும் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும்



நன்மை பயக்கும் ஒத்துழைப்பை விரிவுபடுத்த பங்களிக்குமாறு மொஸ்கோவிலுள்ள இந்திய சமூகத்தினரைக் கேட்டுக் கொண்ட வெளிவிவகார அமைச்சர், கடந்த 70–80 ஆண்டுகளில், உலக அரசியலில் இந்தியாவும் ரஷ்யாவும் நிறைய மாற்றங்களைச் சந்தித்துள்ளன என்றார்.

பாதுகாப்பு, அணுசக்தி மற்றும் விண்வெளி என்பவற்றில் அதிக நம்பிக்கை கொண்ட நாடுகளுடன் ரஷ்யா முன்னெடுக்கும் ஒத்துழைப்பு அதன் தரத்தைப் பிரதிபலிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.